# உதயன்

சுடர் : 36 | கதிர் : 189 | வியாழக்கிழமை | வைகாசி 19 ஆம் நாள் 03 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 | விலை: 30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111


## கொரோனாவால் வடக்கில் இரு சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 3

கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் 15 ➤

## இணுவில் பகுதியிலும் ஒரு பிரிவு முடக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒரு கிராம அலுவலர் பிரிவைத் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவு சிபார்சு செய்துள்ளது. அதன்படி, இணுவில் கிராமத்தில் ஜே/190 கலாஜோதி கிராம அலுவலர் பிரிவையே தனிமைப்படுத்த 15 ➤

# 14 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது பயணத் தடை



### மக்கள்தான் காரணம் என்று இராணுவத் தளபதி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 3

மக்களின் பொறுப்பற்ற செயல்களால், தற்போது நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடு எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி அறிவித்துள்ளார். எனவே, பொதுமக்கள் இனியாவது வீடுகளிலிருந்து வெளியேறாது இருங்கள். கொரோனாத் தடுப்பு நடைமுறைகளைத் தவறாது பின்பற்றுங்கள் என்றும் அவர் மீள அறிவுறுத்தினார். 15 ➤

## நுங்கு வெட்ட ஏறியவர் கால் இடறி வீழ்ந்து சாவு

### சுழிபுரத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வட்டுக்கோட்டை வறுத்தோலை சுழிபுரம் பகுதியில் குடும்பத் தலைவர் ஒருவர், நேற்று பனை மரத்திலிருந்து வீழ்ந்து உயிரிழந்தார் என்று வட்டுக்கோட்டை பொலிஸார் தெரி 15 ➤

## வடக்கில் 179 யாழில் 123

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 176 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 179 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்றுப் பகல் மேற்கொள்ளப்பட்ட சோதனை மற்றும் யாழ்ப்பாணப் பல்க 15 ➤



## 5 மில்லியன் 'பைசர்' தடுப்பூசிகளை வழங்க அமெரிக்க நிறுவனம் உறுதி

### ஜூலையில் 3 லட்சம் தடுப்பூசிகள் வரும்
### ரஷ்யாவில் இருந்தும் 14 மில்லியன் தடுப்பூசிகள்

கொழும்பு, ஜூன் 3

இலங்கைக்கு இவ் வருடத்துக்குள் 5 மில்லியன் 'பைசர்' தடுப்பூசிகள் வழங்கப்படும் என அமெரிக்க நிறுவனம் உறுதியளித்துள்ளது. முதற்கட்டமாக 3 லட்சம் தடுப்பூசிகள் அடுத்த மாதம் நாட்டுக்கு வரவுள்ளன என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இந்த தகவலை வெளி 15 ➤



## தீப்பற்றிய கப்பலின் ஒரு பகுதி மூழ்கியது

### எண்ணெய்க் கசிவு ஏற்படும் அபாயம்

கொழும்பு, ஜூன் 3

கொழும்பு துறைமுகத்துக்கு அப்பால் தீப்பற்றிய எம்.வி.எக்ஸ் - பேர்ள் கப்பல் தரை தட்டியுள்ளது. அதன் ஒரு பகுதி மூழ்கியுள்ளது என்றும் அதனால், எண்ணெய்க் கசிவு ஏற்படும் 15 ➤

## 10 வயதுக்கு உட்பட்ட 22 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடக்கு மாகாணத்தில் 10 வயதுக்கு உட்பட்ட 22 சிறுவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சுகா 15 ➤

## தடுப்பூசி ஏற்றுவதில் மக்களின் ஆர்வத்தை வரவேற்கின்றோம்

### அடுத்தகட்ட தடுப்பூசி விரைவில் கிடைக்கும் என்கிறார் சவேந்திர சில்வா

கொழும்பு, ஜூன் 3

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக சைனோஃபோர்ம் தடுப்பூசிகளை ஏற்றுவதில் யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் காட்டிய ஆர்வத்தை வரவேற்கின்றோம். முதல் கட்டமாக 50 ஆயிரம் தடுப்பூசிகள்தான் யாழ். மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன. 15 ➤

## 50,000 தடுப்பூசிகளும் நேற்றுடன் முடிவடைந்தன

### இன்று வழங்கப்படவிருந்த பகுதிகளுக்கு தடுப்பூசி இல்லையென மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

"யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட முதலாம்கட்ட 50 ஆயிரம் தடுப்பூசிகள் இன்றுடன் (நேற்று) நிறைவடைந்தன. நாளை (இன்று) வழங்கப்படும் என்று முன்னரே அறிவிக்கப்பட்டிருந்த பகுதிகளுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படமாட்டாது. அடுத்த கட்டத்தில்தான் வழங்கப்படும்" என்று, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார். 15 ➤

## பொருளாதார சரிவுக்கு இடமளிக்க முடியாது!

### தொற்றாளர்கள் காணப்பட்டாலும் தொழிற்சாலைகள் இயங்கவேண்டும் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜூன் 3

தற்போதைய நிலைமைகளுக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்க முடியாதென்றும் சவாலை வெற்றிகொண்டு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்லும்போது, 14 ➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகளின் கடனாளிகளுக்கு சலுகைகளை வழங்குங்கள்

## வங்கிகளுக்கு மத்திய வங்கி அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூன் 3

**கொரோனா மூன்றாவது அலை காரணமாக வங்கிகளின் கடனாளிகளுக்கு நிவாரணம் மற்றும் சலுகைகளை வழங்குமாறு இலங்கை மத்திய வங்கி அனைத்து வங்கிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது.**

தற்போதைய நிலைமையில் வங்கிக் கடனாளிகள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு செயற்படுமாறு வங்கிகளை இலங்கை மத்திய வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த மே 15ஆம் திகதி வழங்கப்பட்ட கடன் மற்றும் வட்டி இரண்டையும் மீளச் செலுத்துவது ஓகஸ்ட் 31ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட வேண்டும். செயற்படா கடன்களுக்கான அனைத்து அறவீடுகளும் ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட வேண்டும். 5 லட்சம் ரூபாவுக்கு குறைவான காசோலைகளின் செல்லுபடிக்காலம் ஜூன் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. குறுகிய கால கடன் வசதிகளும் ஓகஸ்ட் 31ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட வேண்டும், என்று அறிவுறுத்தியுள்ளது. (ஒ.5,இ)

# ஏன் அவசரம்?



யாழ்ப்பாணம், ஜூன் 3

பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை நாடு முழுவதும் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சங்கானை மேற்கு (ஜே/179) கிராம அலுவலர் பிரிவிலும் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

கொரோனாப் பரவல் காரணமாக சமூகஇடைவெளி பேணுமாறு திரும்பத் திரும்ப அறிவுறுத்துகின்றபோதும் அதனைக் கண்டுகொள்ளாமல் மக்கள் கூட்டமாக பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு திரண்டிருந்தனர். அதிகாரிகளும் அதனைக் கண்டுகொள்ளவில்லை. (ஒ.ஜ.319)

# நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

வட்டுக்கோட்டை, ஜூன் 3

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்த தண்ணீர் இறைக்கும் மோட்டார் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அண்மைக் காலமாக வட்டுக்கோட்டை பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-27)

# 110 கிலோ கஞ்சாவுடன் மாதகலில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 3



இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கஞ்சா கடத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டில், மாதகல் கடற்பரப்பில்வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாதகல் கடற்பரப்பில் கஞ்சா கடத்தப்படுவது தொடர்பில் கடற்படைப் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற கடற்படையினர் சந்தேகநபரைக் கைதுசெய்தனர். அவரிடமிருந்து 110 கிலோகிராம் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

அத்துடன் கஞ்சா கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட படகும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் மாதகல் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக, இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (து-20)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 3

கிளிநொச்சி குமாரசாமிபுரம் கிராமத்தில், வீட்டுக் கிணற்றிலிருந்து மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதே பகுதியைச் சேர்ந்த வேலாயுதம் பரமேஸ்வரி (வயது 74) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் கண்டாவளை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த நிலையில், நோய்வாய்ப்பட்டிருந்த அந்த மூதாட்டி, தனிமையில் வசித்துவந்த நிலையில், நேற்று கிணற்றில் சடலமாகக் கண்டறியப்பட்டு மீட்கப்பட்டுள்ளார்.

அவர் கிணற்றில் தவறி வீழ்ந்தாரா? அல்லது உயிர்மாய்த்தாரா? அல்லது கொலையா? என்ற ரீதியில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (து-214,113,6)

# நாட்டைப் பாதுகாப்போமென வந்தவர்கள் தற்போது திசைமாறிப் பயணிக்கிறார்கள்!

## அரசுமீது பேராயர் மல்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 3

'நாட்டை பாதுகாப்போம் என அறிவிப்பு விடுத்து ஆட்சிக்கு வந்தவர்கள் தற்போது திசைமாறி பயணித்துக்கொண்டிருக்கின்றனர். நாட்டு வளங்கள் விற்கப்படுகின்றன. எனவே, நாட்டுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய திசையில் பயணிப்பதை அரசு உடன் நிறுத்த வேண்டும்' என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நாட்டை பாதுகாப்போம் என அறிவித்து, ஆட்சி அதிகாரத்தை பொறுப்பேற்ற குழுவினர், நாட்டை சீரழிக்கும் திசையை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றனர். எமது மனங்களுக்குள் ஏற்பட்டிருந்த நம்பிக்கை சிதைவடையும் சூழ்நிலை உருவாகியிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இந்நாடு எத்திசையை நோக்கி பயணிக்கின்றது?, யார் நிர்வாகம் நடந்துவது?, யார் தீர்மானம் எடுப்பது? என்பவை உள்ளிட்ட விடயங்களிலும் நம்பகத்தன்மையற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்வாறானதொரு திசையில் பயணிப்பதை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டு வளங்களை இலகுவில் விற்பனை செய்யமுடியும். அவ்வாறு வளங்களை விற்பது அபிவிருத்தி கிடையாது. எமது நாட்டுக்கென ஆத்ம கௌரவம், ஆத்ம நம்பிக்கை உள்ளது. இதனை பாதுகாக்க வேண்டியது அரசியல்வாதிகளின் பொறுப்பாகும்.

எம்.சி.சி. உடன்படிக்கைக்கு நாம் எதிர்ப்பை வெளியிட்டபோது எம்முடன் இணைந்து அதற்கு எதிராக குரல்



கொடுத்த தற்போதைய ஆட்சியாளர்கள், இன்று அச்செயலைவிடவும் பாரதூரமான விடயங்களை முன்னெடுப்பதை காணமுடிகின்றது.

அதேவேளை, கப்பல் தீப்பிடித்த சம்பவத்தால் எமது நாட்டு மீனவர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. துறைமுகம் சார் அமைச்சரும் அவரின் பணியாட் தொகுதியினரும் இச்சம்பவம் குறித்து எமக்கு இன்னும் தெளிவான பதிலை வழங்கவில்லை. கப்பலில் தீப்பரவல் ஆரம்பித்தபோதே அதனை ஆழ்கடலுக்கு கொண்டுசெல்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது கடல் வளம் அழிவடைந்துள்ளது. கடல்வாழ் உயிரினங்களும் அழிவடைந்துவருகின்றன.

இக்கப்பல் கடலில் மூழ்கினால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கும். அதற்கு இடமளிக்க முடியாது. கப்பல் நிறுவனத்துக்கு எதிராக மீனவர்கள் வழக்கு தொடுக்க வேண்டும். மீனவர்களைத்திரட்டி அதற்கான தலைமைத்துவத்தை நான் வழங்குவேன். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மட்டும் போதாது. உரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட இழப்பீடு வழங்கப்பட வேண்டும். மீனவர்கள் தொழிலை மீள ஆரம்பிப்பதற்கு ஏதுவான சூழ்நிலையை விரைவில் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்' - என்றார். (ம-44,22,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைனோ.'.போர்ம் தடுப்பூசி ஏற்றினால் இனவிருத்தி பாதிப்பு என்று கட்டுக்கதை

## கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை தவறவிடாது அனைவரையும் ஏற்றுமாறு கோருகிறார் துணைவேந்தர்

**யாழ்ப்பாணம், ஜூன் 3**

**யாழ். மாவட்டத்துக்கு சீனா நாட்டினுடைய தயாரிப்பான சைனோஃபார்ம் தடுப்பூசியே வழங்கப்பட்டுள்ளது. எமது ஆய்வின்படி அது ஒரு சிறப்பான தடுப்பூசியாகவே காணப்படுகின்றது. யாழ் மாவட்ட பொதுமக்களும் இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.**



இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தடுப்பூசி என்பது மக்களின் வாழ்க்கையில் ஒரு வரப்பிரசாதம். அதாவது அம்மை, போலியோ நோய் போன்ற பல்வேறுபட்ட நோய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றிருக்கின்றோம். கடந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்து இந்த கொரோனா என்று சொல்லப்படுகின்ற வைரஸ் காரணமாக உலகளாவிய ரீதியில் அதன் தாக்கமானது உணரப்படுகின்றது. அந்த வைரஸ் எம்மைத் தேடி வராது. ஆனால் நாமாகவே அந்த வைரஸை பற்றிக்கொள்கின்றோம் அதுதான் உண்மை. உலகில் கோடிக்கணக்கில் மக்கள் தமது வாழ்வை இழந்துகொண்டிருக்கின்றார்கள். சிலர்தமது ஆயுளை இழந்துள்ளார்கள். எனவே இது ஒரு பெரும் வைரஸ் நோயாகக் காணப்படுகின்றது

இதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே இதற்கு தடுப்பூசி தான் ஒரே ஒருவழியாகும். அமெரிக்கா, ரஷ்யா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் தடுப்பூசிகளைத் தயாரித்துள்ளன.

எனினும் யாழ். மாவட்டத்துக்கு சீனா நாட்டுடைய தயாரிப்பான சைனோஃபார்ம் தடுப்பூசியே வழங்கப்பட்டுள்ளது. எமது ஆய்வின்படி அது ஒரு சிறப்பான தடுப்பூசியாகவே காணப்படுகின்றது. யாழ். மாவட்ட பொதுமக்களும் இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த தடுப்பூசியை இனிவரும் காலங்களில் பெறுவது மிகவும் கடுமையான விடயமாகும். ஏற்கனவே இந்திய தடுப்பூசி வந்தது. எனினும் இரண்டாம் கட்டத்துக்குரியது வரவில்லை. எனவே இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் அதை வழங்குவதாயின் பல வருடங்கள் செல்லும்.

யாழ். மாவட்டத்துக்கு அரசால் ஒரு தொகுதி தடுப்பூசி தற்போது வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை யாழ் மாவட்ட மக்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த சைனோஃபார்ம் தடுப்பூசி தொடர்பில் பலவிதமான கருத்துருவாக்கம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

இளைஞர்கள் தடுப்பூசி போட்டால் இனவிருத்தி பாதிப்பு ஏற்படும் எனக் கூறுகிறார்கள். அவ்வாறு ஒரு சம்பவமே இல்லை. ஆனால் மக்கள் மத்தியில் அந்த கருத்துருவாக்கம் உருவாக்கப்படுகின்றது.

இளைஞர்கள் அல்லது இளம் பெண்கள் இந்த ஊசியைப் போட்டால் கரு உருவாகாது என்றெல்லாம் கருத்துக்கள் உருவாக்கப்படுகின்றன அந்த விடயத்தில் எந்த விதமான உண்மையும் இல்லை- என்றார். (20)



# 5000 கொடுப்பனவு வழங்கல் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூன் 3

நாடளாவியரீதியில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் செயற்றிட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இதன் ஒரு கட்டமாக கண்டாவளை புளியம்பொக்கணை கிராம அலுவலர் பிரிவிலும் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரின் மாவட்ட இணைப்பாளர் தவநாதன் மற்றும் கண்டாவளை பிரதேச செயலர் ஆகியோர் ஞ கலந்துகொண்டு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கினர். (ஐ-113)

# வவுனியாவில் அவசர அழைப்புக்கான இலக்கங்கள்



வவுனியா, ஜூன் 3

வவுனியாவில் அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் மக்களுக்குள்ள பிரச்சினைகள் குறித்து முறையிடுவதற்கு ஏதுவாக அவசர அழைப்பு இலக்கங்கள் வவுனியா மாவட்டச் செயலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


இந்த அவசர அழைப்பு பிரிவு வவுனியா மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும், மாவட்டச் செயலகத்திலும் இயங்கவுள்ளது. கொரோனா நோய்த் தொற்றுக் காரணமாக அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் மக்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால் கீழே குறிப்பிடப்பட்ட அவசர இலக்கங்களுக்கு தெரிவிக்க முடியும் என வவுனியா மாவட்டச் செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாவட்டச்செயலகம், 0242222235, 0242222233, 0242222234. வவு.பிரதேச செயலகம், 0242222202, 0242222237, 0242221948. வவு. தெற்கு பிரதேச செயலகம், 0242222238, 0242222117, வவு. வடக்கு பிரதேச செயலகம், 0242053020, 0242053021வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலகம், 0242260905, 0242260904 ஆகிய இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (ப-110)

# நவாலி வடக்கில் நேற்று வழங்கப்பட்டது தடுப்பூசி

நவாலி,ஜூன் 3

நவாலி வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நவாலி மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. வலி. தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர், வலி. தென்மேற்கு பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தடுப்பூசி ஏற்றும் பணியை முன்னெடுத்தனர்.

ஜே/134 நவாலி வடக்கைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் தடுப்பூசி ஏற்றுவதில் ஆர்வத்துடன் காணப்பட்டனர். இதேவேளை நவாலி வடக்கில் நேற்று புதன்கிழமை ஊசி ஏற்றிக்கொண்டவர்களுக்கான 2 ஆவது தடுப்பூசி ஜூலை மாதம் முதலாம் திகதி என்று குறிக்கப்பட்ட அட்டை ஒன்றும் அவர்களிடம் வழங்கப்பட்டது. (ஐ-50)





யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுமக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் நான்காவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அச்சுவேலி பிரதேச மருத்துவமனைத் தடுப்பூசி வழங்கும் நிலையத்திலும் நேற்றுத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. (ஐ-20)

# யாழ். பல்கலைப் பணியாளர்களுக்கும் ஏற்றப்பட்டது கொரோனாத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 2ஆயிரத்து 100 பணியாளர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் சுமார் ஆயிரத்து 600 பேருக்கும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களில் 500 பேருமாக மொத்தமாக 2 ஆயிரத்து 100 பேருக்கு தடுப்பூசி வழங்குவதற்கு ஜனாதிபதி விசேட உத்தரவை வழங்கியுள்ளதன் அடிப்படையில் நேற்றுக் காலை யாழ் பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீசற்குணராஜா தடுப்பூசியை ஏற்றிக் கொண்டு. நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழகப் பணியாளர்கள் தாமாக முன்வந்து தமக்குரிய தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இன்றையதினமும் பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கு சைனோஃபார்ம் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள மக்களே தவறிவிடாதீர்கள்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 3**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டத்தை தவற விடவேண்டாம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளை கோரியுள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. எமது மாவட்டத்தின் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் தொற்று வீதம் இங்கு அதிகம். இதனாலேயே யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தடுப்பூசி ஏற்றல் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டது.

ஆனாலும், தடுப்பூசி ஏற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட சில கிராம அலுவலர் பிரிவுகளில் 50 சதவீதமான மக்களே அதனைப் பெற்றுள்ளனர் என்று தெரியவருகின்றது. தடுப்பூசி தொடர்பான பூரண தெளிவு மக்களுக்கு இல்லையோ என்று தோன்றுகின்றது.

கர்ப்பிணித் தாய்மார் தவிர்ந்த 30 வயதுக்கு மேற்பட்ட ஏனையோர் தடுப்பூசியை ஏற்ற முடியும். இது தொடர்பில் வீண் அச்சம் எதுவும் தேவையில்லை.

தடுப்பூசி ஏற்றப்படுதல் தொடர்பான விவரங்கள் ஒலிபெருக்கி ஊடாக அறிவிக்கப்படுகின்றன. அதற்கு அமைவாக ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏதாவது ஓர் ஆவணத்துடன் சென்று தடுப்பூசி ஏற்ற முடியும்.

தடுப்பூசி ஏற்றுவதற்கு முன்பாக ஆலோசனை பெற விரும்புவர்கள் அல்லது ஏதாவது கிளினிக்குகளுக்குச் செல்பவர்கள் அந்தக் கிளினிக் கொப்பிகளுடன் சென்று தடுப்பூசி ஏற்றும் நிலையத்தில் உள்ள மருத்துவரின் ஆலோனையையும் பெற முடியும் - என்றுள்ளது. (ஒ.5)

# இரு நாள்களில் 789 பேருக்கு கொடிகாமத்தில் தடுப்பூசி

கொடிகாமம், ஜூன் 3

கொடிகாமம் அரசினர் மருத்துவமனையில் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய், ஆகிய இரண்டு தினங்களும் 789 பேருக்கு கொவிட் - 19 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மிருசுவில் வடக்கு பிரிவில் 126 பேருக்கும், மிருசுவில் தெற்கு பிரிவில் 191 பேருக்கும், கரம்பகம் பிரிவில் 182 பேருக்கும், உசன் பிரிவில் 290 பேருக்கும் இவ்வாறு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

இரண்டு தினங்களும் கொவிட் 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளத் தவறிய மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, உசன் மற்றும், கரம்பகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு நேற்று கொடிகாமம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள தவசிக்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் தடுப்பூசி ஏற்றப்பட்டது. (ப-159)

# 5000 ரூபா கொடுப்பனவு வழங்கல் நேற்று ஆரம்பம்

மன்னார்,ஜூன் 3

கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு நான்காம் கட்ட கொடுப்பனவாக 5ஆயிரம் ரூபா வழங்கும் நிகழ்வு நேற்று நாடளாவிய ரீதியில் ஆரம்பமானது.

மன்னார் மாவட்டத்திலும் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று ஆரம்பமானது என்று மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் ஐ. அலியார் தெரிவித்தார்.

மன்னார் பெரியகடை பகுதியில் மன்னார் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் மற்றும் மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப் ஆகியோர் இணைந்து பயனாளிகளுக்கு கொடுப்பனவை வழங்கினர்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் ஐ. அலியார் கருத்துத் தெரிவிக்கையில்;

" மன்னார் மாவட்டத்தில் 33 ஆயிரத்து 378 குடும்பங்களில் சமூர்த்தி திட்டத்தின் கீழ் பயனாளிகளாக திகழும் 22 ஆயிரத்து 895 குடும்பங்கள் இத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கொடுப்பனவு மாவட்டத்திலுள்ள சமூர்த்தி வங்கிகளிலிருந்து உத்தியோகத்தர்களால் கிராமம் கிராமமாகச் சென்று பயனாளிகளின் வீடுகளிலேயே வைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ- 60)

# கொரோனாவை விரட்ட சுன்னாகத்தில் வழிபாடு

சுன்னாகம், ஜூன் 3

உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை கோட்டம்கட்டு ஞான வைரவர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் முதன்மைக் குரு பிரம்மஸ்ரீ சா.கோபாலசர்மா குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்கள் தோறும் கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



நாவற்குழி பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் இடைத்தங்கல் சிகிச்சை மத்திய நிலையத்துக்கு 100 கட்டில்கள் வழங்கப்பட்டன. (ஐ)

# கிளி. ஆடைத் தொழிற்சாலைகளில் மே மாதம் 226 பேருக்கு கொரோனா

கிளிநொச்சி, ஜூன் 3

கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கும் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளில் மே மாதம் மாத்திரம் 226 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளிலும் அண்ணளவாக 4 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர் அவர்களில் கடந்த மாதம் ஒரு ஆடைத் தொழிற்சாலையில் ஆயிரத்து 144 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 200 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது, மற்றைய ஆடைத் தொழிற்சாலையில் 555 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 26 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. சுமார் 4 ஆயிரம் பேர் பணியாற்றுகின்ற இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளிலும் ஆயிரத்து



699 பேருக்கு மேற்கொண்ட பரிசோதனையில் 226 பேருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் சாந்தபுரம் கிராமத்தில் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதால் குறித்த கிராம கடந்த 29ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற இளையவர்களுக்கு தொற்று ஏற்பட்டால், அதனால் வீடுகளில் உள்ள முதியோர்களுக்கும் ஏற்படும். முதியோர்களுக்கு அதிகளவில் தொற்று ஏற்பட்டால் அது சுகாதாரத் துறைக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என சிவில் சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-214)

# யாழுக்கு நாமல் வந்தாலேயே மேலும் 50,000 தடுப்பூசிகள்

## அடித்துவிட்டார் அங்கஜன் எம்.பி

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணத்துக்கு நாமல் ராஜபக்ச வந்ததாலேயே மேலும் 50 ஆயிரம் தடுப்பூசிகளைப்பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

கொரோனா அச்சநிலையைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு முதல் கட்டமாக 50 ஆயிரம் தடுப்பூசிகள் அரசால் வழங்கப்பட்டன. அந்தத் தடுப்பூசிகளை வழங்கும் நிகழ்வுக்கு அமைச்சர் நாமல் ராஜபக்ச வந்திருந்தார் இது தொடர்பில் அரசியல் தரப்பில் பலரும் கருத்துக்களைத் தெரிவித்து வந்தனர் இந்த நிலையிலேயே அங்கஜன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாமல் ராஜபக்ச விளையாட்டுத்துறை அமைச்சர்தான். ஆனால் கொவிட் ஒழிப்புச் செயலணியில் அவர் முக்கிய இடத்தில் உள்ளார். அவர் அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிடுகின்றார். அக்கறை உள்ளோர் எந்த மாவட்டத்துக்குச் சென்றும் பார்க்கலாம். அக்கறை இல்லாதோர் வீட்டிலிருந்து எதையும் கதைக்கலாம். வந்து பார்ப்பவர்கள்மீது குறை சொல்லிக்கொண்டிருப்பது நியாயமற்றது. யார் வந்து பார்த்தாலும், அது எமது மக்களுக்கு உதவியாகவே இருக்கும். நாமல் ராஜபக்ச யாழ்ப்பாணத்துக்கு வந்து நிலைமைகளைப் பார்வையிட்டதாலேயே மேலும் 50 ஆயிரம் ஊசிகளைப் பெற்றுக்கொள்ள வசதியாக இருக்கின்றது. நாங்கள் குறை கூறுவதைவிட்டு, யார் வந்து பார்த்தாலும் எமக்கு நல்லதே என்பதை புரிந்து கொள்ளவேண்டும் - என்றார். (ப-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேர்ள் கப்பலால் பேராபத்து

**கொ**ழும்புத் துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றியெரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால், கணிக்கப்பட்டதை விடவும் மிகமிக மோசமான விளைவுகளை இலங்கை எதிர்கொள்ளப் போகின்றது என்பது பட்டவர்த்தனமாகின்றது. முற்றாக எரிவடைந்த நிலையில் இருந்த அந்தக் கப்பல் தற்போது கடலுக்குள் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்தே இந்தப் பேராபத்து எம்மை நோக்கிப் பரந்து விரிகின்றது.


சுமார் 25க்கும் அதிகமான ஆபத்தான அமிலக் கொள்கலன்கள் கொண்ட அந்தக் கப்பலை, வேறுசில நாடுகள் நங்கூரமிடுவதற்கு அனுமதிக்காத நிலையில், இலங்கை அதை எவ்வாறு அனுமதித்தது? இந்த அனுமதியை யார் கொடுத்தனர்? என்ன அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது? என்ற விவாதப் பிரதிவாதங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் பரவலாக எழுந்துள்ள போதிலும், அவை எல்லாவற்றையும் விட, மேற்படி கப்பலின் தற்போதைய பேராபத்து நிலைக்கு என்ன நடவடிக்கையை அரசு எடுக்கப்போகின்றது(?) என்பது இங்கு மில்லியன் டொலர் கேள்வியாக எழுகின்றது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை நேற்று நடுக்கடலை நோக்கி இழுத்துச்செல்லும் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோதே அது மூழ்கும் நிலையை அடைந்திருக்கின்றது. அவ்வாறு அந்தக் கப்பல் மூழ்குமாக இருந்தால், மிகப்பெரும் எண்ணெய்க் கசிவு நாட்டின் கடற்கரையோரங்களில் ஏற்படும் என்று எச்சரித்துள்ளது துறைசார் திணைக்களம். எண்ணெய்க் கசிவின் பாதிப்பு திக்கோவிட்ட முதல், நீர்கொழும்பு வரையான பகுதிகளில் மிக அதிகமாக இருக்கும் என்று அபாய ஒலி எழுப்பியுள்ளது கடல் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார சபை.

கப்பல் மூழ்கி அதிலுள்ள எண்ணெய் மிதக்கும் பட்சத்தில் நாடு எதிர்கொள்ளும் பாதிப்பு வார்த்தைகளால் வர்ணிக்க முடியாததாக அமையும். அமிலக்கசிவால் ஏராளம் கடலுயினங்கள் குறித்த கடற்பரப்பில் செத்துக் கிடக்கின்றன. இந்த இறப்புக்கள் மேலும் பல மடங்கு அதிகரிக்கும். அத்துடன் கடலின் மேற்பரப்பில் இருந்து எண்ணெய்ப் படலத்தை அகற்றுவதற்கு பல மாதங்கள் வுரை ஆகலாம். சில வேளைகளில் வருடங்கள்கூட செல்லலாம். ரஷ்யாவில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கப்பல் விபத்தொன்றால் ஏற்பட்ட பாதிப்புக்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகக் கட்டியம் கூறுகின்றன.

தன் வல்லமைக்கு அப்பாற்பட்ட கடன்சுமைகளை இலங்கை எதிர்கொண்டுள்ளமை அனைவரும் அறிந்ததே. இந்தப் பெரும் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டுவரும் திராணி கடலுணவு உற்பத்திகளுக்கும், ஆடையுற்பத்திகளுக்கும், தேயிலை மற்றும் தெங்கு உற்பத்திகளுக்கும்தான் கணிசமான அளவு உண்டு. கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக ஆடை உற்பத்தியும், தெங்கு மற்றும் தேயிலை உற்பத்திகளும் மந்தமான வினைத்திறனை எதிர்கொண்டுள்ள நிலையில், இந்த எண்ணெய்க் கசிவு கடலுணவு உற்பத்தியிலும் நாட்டின் பொருளாதாரத்திலும் மிகையான பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றது என்பதற்கு இரண்டாவது கருத்தில்லை.

எக்ஸ்பிரஸ் பேர்ளை இலங்கைக்குள் அனுமதித்தது ஒருபுறம் இருக்கட்டும். கப்பலுக்குள் தீப்பொறி தென்படும்போதே அதை நடுக்கடலை நோக்கி நகர்த்தியிருந்தால் எண்ணெய்க் கசிவு என்ற இந்த பேராபத்தின் தாக்கத்தை ஓரளவாவது குறைத்திருக்கலாம். எனவே நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து அடுத்த ஓரிரு நாள்களுக்குள் போர்க்கால அடிப்படையில் செயற்பட வேண்டியது அரசின் தலையாக கடமையாக அமைகின்றது. அத்துடன் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் நிறுத்திவிடாது ஒவ்வொரு மீனவர்களுக்கும் ஏற்பட்ட இழப்பை சரியாக மதிப்பிட்டு அதை உரிய முறையில் துரித கதியில் வழங்க வேண்டியது அரசின் தவிர்க்க முடியாத பொறுப்பும்கூட.



# இலங்கையில் கொரோனா மிகமோசமான நிலையில்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 3**



**இலங்கையில் கொரோனாத் தொற்று நிலைமை கையை மீறிவிட்டது. கொவிட் -19 வைரஸ் சமூகப் பரவலாகி இன்று மிகமோசமான நிலையொன்றில் உள்ளது. இவ்வாறு இலங்கையின் சிரேஷ்ட வைரஸ் ஆய்வுகள் தொடர்பான நிபுணரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கையாளும் செயலணி தொடர்ச்சியாக பொய்களைக் கூறி வருகின்றது. வைரஸ் சமூக பரவலாகியுள்ள நிலையில் கொத்தணிகளுக்குள் அடக்க முயல்கின்றது.

ஆரம்பத்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்படவில்லை. அதனால் கட்டுப்பாட்டை மீறிச் சென்றுள்ளது. சுகாதார அமைச்சர் இந்த நிலைமைகளைக் கையாள்வதில் பலவீனம் கண்டுள்ளார். எனவே தொடர்ச்சியாக முடக்கமொன்று இருக்க வேண்டும். மக்களை முழுமையாக சுகாதார வழிமுறைகளின் கீழ் கொண்டுவர வேண்டும். மக்களின் அநாவசியமான செயற்பாடுகள் காரணமாக மீண்டும் வைரஸ் பரவல் ஏற்படும். வைரஸ் பரவலை எம்மால் இலகுவாகக் கட்டுப்படுத்த வாய்ப்புக்கள் இருந்தன. உலக சுகாதார ஸ்தாபனம் ஆரம்பத்தில் எமக்கு கொடுத்த 20 வீதமான தடுப்பூசிகளை அவசியமான நபர்களுக்குக் கொடுத்திருந்தால், நிச்சயமாக இந்தப் பரவலை கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

பரவலைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 70 வீதமான மக்களுக்கேனும் தடுப்பூசிகளை ஏற்றியிருக்க வேண்டும். ஆகவே பரிசோதனைகளை விரைவுபடுத்தி சரியான விதத்தில் கையாள வேண்டும். தடுப்பூசி மூலமாக எந்தவொரு மோசமான விளைவுகளும் ஏற்படாது என்பதை உறுதியாகக் கூறமுடியும். சிலர் பொய்யான பிரசாரங்களைச் செய்கின்றனர். முறையான ஆய்வுகளின் பின்னரே தடுப்பூசிகள் பயன்படுத்தப்படும். அதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை - என்றார். (ம-4)

# சிவப்பு வலயமாக 98 வீதமான பகுதி

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்

கொழும்பு, ஜூன் 3

நாட்டில் கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலையில் 98 வீதமான பகுதி சிவப்பு வலயமாக மாறியுள்ளது. இது ஆபத்தான நிலைமையாகும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில நாடுகள் இலங்கையை சிவப்பு பட்டியலில் தரப்படுத்தியுள்ளன. அதேபோன்று, எச்சரிக்கை வலயத்தில் இலங்கை 3ஆவது இடத்தில் உள்ளது. இதனடிப்படையில் நாங்கள் ஆபத்தான நிலையிலேயே பயணித்துக் கொண்டிருக்கின்றோம். நாட்டில் நாளுக்கு நாள் தொற்றாளர்கள் அதிகரித்து வருவதால், கொரோனா நிலவரம் நாளுக்கு நாள் வேறுபடலாம். நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடு உள்ளிட்ட அனைத்து விடயங்களும் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவே முன்னெடுக்கப்பட்டுள்ளன. முடிந்தவரை பயணக் கட்டுப்பாடுகளை விதித்தாவது தொற்றாளர்களின் எண்ணிக்கையை, இறப்புக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். தொற்றின் நிலைமை குறைவடையும்போது இறுக்கமான நடைமுறைகளில் தளர்வுகள் ஏற்படுத்தப்படலாம். மோசமடையும் பட்சத்தில் இறுக்கமான நடைமுறைகளை மேலும் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்படும். புத்தாண்டுக் கொத்தணிக்கு பொதுமக்களின் செயற்பாடுகளே காரணம் - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை;*

## அனைத்து ஆதாரங்களையும் ஐ.நாவிடம் நிச்சயம் கொடுப்போம்

செல்வம் எம்.பி தெரிவிப்பு



வவுனியா, ஜூன் 3

அரசியல் கைதிகளின் விடுதலை சம்பந்தமான அனைத்து ஆதாரங்களையும் ஐ.நா.விடம் நிச்சயமாகக் கொடுப்போம் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடைசியாக நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டுத் தொடரிலே வெளிவிவகார அமைச்சரை தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் சந்தித்து எங்களுடைய அரசியல் கைதிகளின் விடுதலை சம்பந்தமாகக் கலந்துரையாடினோம். அரசியல் கைதிகள் சம்பந்தமான முழு விவரத்தையும் நாங்கள் கையளித்திருக்கிறோம். அவரிடம் உரையாடியிருக்கிறோம். அந்த வகையிலே ஜனாதிபதியோடு பேசி மீண்டும் ஜனாதிபதியோடு சந்திப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுத்தருகிறேன் என அவர் கூறியிருக்கின்றார். சிறையிலே வாடிக் கொண்டிருக்கின்ற அரசியல் கைதிகள் சம்பந்தமாகவும், வெளியிலே அவர்களுடைய குடும்பங்கள் அனுபவிக்கும் படுமோசமான துன்பத்தையும் நாங்கள் எடுத்துக் கூறியிருக்கின்றோம். கொரோனாத் தொற்று என்பது சிறைக்கூடங்களையும் விட்டுவைக்கவில்லை.எனவே அரசியல் கைதிகளின் விடுதலை ஓரளவுக்கேனும் அவர்களை பிணையில் அல்லது அவர்களுக்கு பொது மன்னிப்பளித்து விடுதலைசெய்வது, பிணை வழங்குவது பற்றிப் பேசினோம். இருந்தாலும் அனைவரையும் விடுதலை செய்வது நன்றாக இருக்கும் என்பதுதான் எங்களுடைய பொதுவான விடயமாக இருந்தது. இந்த கலந்துரையாடல் மிக நேர்த்தியான முறையிலே நடைபெற்றது. ஐ.நா சபையினுடைய தீர்மானத்திலே இந்த அரசியல் கைதிகளுடைய விடுதலை சம்பந்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. நாங்கள் ஏற்கனவே இந்த மனுக்களை தூதரகங்களுக்கு கொடுத்திருக்கிறோம். இப்பொழுது அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவிடம் கொடுத்திருக்கிறோம். ஐ.நா. சபையிலே இந்த வழக்கினுடைய பின்னணி என்ன? அல்லது வழக்குகளில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்னென்ன கட்டங்களில் அவர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்? என்பதை நாங்கள் நிச்சயமாக சாட்சிகளோடு சொல்ல வேண்டும். எனவே நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களுக்கான விடுதலை சம்பந்தமான அனைத்து ஆதாரங்களையும் நிச்சயமாகக் கொடுப்போம் - என்றார். (ப-110)

# பாலுக்கு பூனையை காவல் வைப்பதா?



## விக்ரமரட்ணவின் நியமனம் தொடர்பில் ஜஸ்மின் சூக்கா விசனத்துடன் கேள்வி

**ஜொகனஸ்பேர்க், ஜூன் 3**

**இறுதிக்கட்டப் போரின்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கு பொறுப்பாக இருந்த 3 பொலிஸ் பிரிவுகளுக்கு அதிபராக இருந்தவர் என்று ஐ.நா. விசாரணையில் பெயர் குறிப்பிடப்பட்ட விக்ரமரட்ண காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் திட்டமிட்ட பொலிஸ் சித்திரவதை போன்ற ஒட்டுமொத்த மனித உரிமை மீறல் சம்பவங்களிலும் கட்டளைப் பொறுப்பு வகித்தமைக்காக வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டால் உலகளாவிய சட்ட மேலாதிக்க வழக்குகளுக்கும் முகம் கொடுக்கும் ஆபத்தில் உள்ளவர் என்று, உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.**

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்துக்குபோர்க்காலத்தில்பொலிஸ்மா அதிபராக இருந்த விக்ரமரட்ண நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனத்துக்கு மே மாதம் 20 ஆம் திகதி நாடாளுமன்றப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது. முன்னைய அரசின் கீழ் உருவாக்கப்பட்ட இடைக்கால நீதிப் பொறிமுறை முழுமையாக இராணுவமயப்படுத்தப்படுகின்றது என்று சூக்கா குறிப்பிடுகின்றார். இலங்கையின் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்துக்கு நிதி வழங்க வேண்டாம் என்று ஐ.நா.வின் அமைதியைக் கட்டியெழுப்பும் நிதியம் மற்றும் சர்வதேச நன்கொடையாளர்களுக்கு கடிதம் அனுப்புவோம். இந்த நியமனம் தொடர்பில் ஐ.நா. முகவர் அமைப்புக்கள் மற்றும் உறுப்பு நாடுகளுக்கு நாம் இரகசிய ஆவணத்தை அனுப்புவோம் என்றும் தெரிவித்தார்.

**உபாலி அபயரட்ண நியமனம்**

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்துக்கு நீதிபதி உபாலி அபயரட்ண நியமிக்கப்பட்டார். 'ஓர் நேரடியான அவமானம் என்றும் வன்முறைச் செயல்' என்றும் அவரது நியமனம் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளால் அடையாளப்படுத்தப்பட்டது. நல்லாட்சி அரசின் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரிப்பதற்காக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச நியமித்த இந்த ஆணைக் குழுவின் தலைவராகச் செயற்பட்டவர் அபயரட்ண.

'இந்த ஆணைக்குழு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்குகள் உள்ளிட்ட பல மனித உரிமை வழக்குகளில் நீதிமன்றத் தீர்ப்புக்களில் குறுக்கீடு செய்துள்ளது' என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரே தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஒருவரை காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்துக்கு தலைமை தாங்குவதற்கு நியமித்தமையானது அந்த அமைப்பின் சுதந்திரத்ததையும் நம்பகத்தன்மையையும் கடுமையாக சீர்குலைத்துள்ளது.

**இழப்பீட்டுக்கான பணியகம்**

இடைக்கால நீதிப் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்த முன்னைய அரசால் அமைக்கப்பட்ட மற்றொரு அமைப்பு இழப்பீட்டுக்கான பணியகம்.

இந்தப் பணியகத்தின் தலைவராக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் நெருங்கிய நண்பர் மேஜர் ஜெனரல் வடுகே பாலித பியசிறி நியமிக்கப்பட்டார். இவர் 62 மில்லியன் டொலர் பெறுமதியான நிதியில் ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டார் என்று நல்லாட்சி அரசால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையில் கண்டறிந்தது. அவர் எதிர்காலத்தில் அரச பணி[illegible]கங்களில் பணியாற்றத் தடை செய்ய வேண்டும் என்றும் ஆணைக்குழு கேட்டுக்கொண்டது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் கோத்தபாய அரசு, அரசியல் பழிவாங்கல்களை விசாரிக்கும் ஆணைக்குழு என்ற ஒன்றை நிறுவி குற்றச்சாட்டுக்களிலிருந்து அவரை விடுவித்தது.

'இராணுவத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இழப்பீடு வழங்கும்போது பெருந்தொகையான நிதி கையாளப்படும். இங்கு இடைக்கால நீதிப் பொறிமுறை இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளது. இழப்பீட்டுப் பணியகத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளவர் சர்வதேச சமூகத்தால் ஆத[illegible] வழங்கப்பட்ட மற்றும் ஊழல் இடம்பெற்றதாகக் கண்டுகொள்ளப்பட்ட ஓர் நடவடிக்கையில் முன்னர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர். அவரது ஊழல் குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்ட இன்னமும் முடிவுறுத்தப்படவில்லை' என்று சூக்கா குறிப்பிட்டுள்ளார். (ஒ.5.இ)

# மாகாண அதிகாரங்களைப் பறிப்பதற்கு எதிராக அனைவரும் அணிதிரளவேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ் அறைகூவல்

மாகாணங்களுக்கென்று குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்கள் ஜனநாயக விழுமியங்களுக்கு எதிராக எதேச்சாதிகாரமாகப் பறிக்கப்படுகின்றன. இந்தப் போக்கை அனைத்து அரசியல் தலைமைகளும் ஓரணியில் நின்று எதிர்க்க வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிறேமச்சந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக நடந்துவரும் அறவழிப் போராட்டமும், ஆயுதப் போராட்டமும் அதிகாரப் பகிர்வுக்கான போராட்டம் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய சகல கட்சிகளும் சமஷ்டி அரசியல் அமைப்பு முறையிலான அதிகாரப்பகிர்வு பற்றியே பேசி வருகின்றன. ஆனால், ஏற்கனவே கிடைத்திருக்கக்கூடிய அற்ப சொற்ப அதிகாரப் பரவலாக்கத்தை பின்கதவு வழியாக அரசு பறித்தெடுக்கின்றபொழுது, இதற்கு எதிராகக் குரல்கொடுக்க வேண்டிய எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டும்காணாமல் மௌனித்துப் போயிருக்கின்றார்கள்.

பாடசாலைக் கல்வி என்பது மாகாணங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களாக இருக்கின்றபோதிலும், மத்திய அரசானது அவ்வப்போது மாகாணப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாகச் சுவீகரித்துக்கொள்கிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் தேசிய பாடசாலைகளுக்கும் மாகாண பாடசாலைகளுக்குமிடையில் பெயர்ப் பலகையைத் தவிர, பாடவிதானங்கள் தொடர்பாகவோ, அல்லது பரீட்சைகள் தொடர்பாகவோ எந்தவிதமான மாற்றங்களும் வேறுபாடும் இல்லை. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தேசிய பாடசாலைகள் என்பது ஒரு தரம் உயர்ந்த பாடசாலைகளைப் போன்ற ஒரு மாயையை உருவாக்கி, மாகாணங்களில் சிறப்பான முறையில் இயங்கிவரும் பாடசாலைகளை மத்திய அரசு சுவீகரித்துக்கொள்வதானது அதிகாரப் பகிர்வுக்கு எதிரான ஒரு செயற்பாடு என்பதை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த ஆட்சிக்காலத்தில் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தற்போதைய நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் போன்றோர் தேசிய பாடசாலைகள் என்பவை தரம் உயர்ந்த பாடசாலை என்பது போன்றதொரு பொய்யான தோற்றப்பாட்டைக் காட்டி மாகாணப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்ற முயற்சித்து வருகின்றனர். அதிகாரப் பகிர்வு தொடர்பாக பேசக்கூடிய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும். 13ஆவது திருத்தத்தைப் பாதுகாப்போம் என்று பொது வெளியில் பேசுபவர்கள் குறைந்தபட்சம் இவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும். நிலைமைகள் இவ்வாறிருக்க, பல லட்சம் மக்களின் உயிரிழப்புகள், பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்தழிப்புகள் இவையெல்லாம் ஏன் நடந்தன என்பதை தமிழ் புத்தி ஜீவிகளும், அரச அதிகாரிகளும் பாடசாலை ஆசிரியர்களும் முதலில் புரிந்துகொள்ள வேண்டும் - என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை டோஸ்கள் ஏற்றுவது என உலக சுகாதார நிறுவனமே அறிவிக்கும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத் தப்படும் தடுப்பூசி ஏற்றும் திட்டத்தில் ஒருவருக்கு எத்தனை டோஸ்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை உலக சுகாதார நிறுவமே அறிவிக்கவேண்டும். அதன் அடிப் படையிலேயே தீர்மானம் எடுக்கவேண் டும். அதை விடுத்து தற்போதுள்ள நிலைமைக்கு ஏற்றவாறு முடிவுகள் எடுக்கக் கூடாது.

இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பேஜ் தெரிவித்தார்.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் ஒரு டோஸ் போதுமானது என்று நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு வருட ஆய்வு முடிவுகள் எம்மிடம் உள்ளன. முதலாவது மற்றும் இரண்டாவது டோஸ்கள் ஏற்றப்படுவதன் விளைவாக உடலில் நோய் எதிர்ப்பு சக்தி ஏற்படுகின்றது. அது குறிப்பிட்ட காலம் வரையில் நீடிக்கின்றது.


வைரஸின் திரிபுக்கு எதிராகவும் இவை ஓரளவு தாக்குப்பிடிக்கின்றன. உலக சுகாதார நிறுவனத்தால் இந்த முடிவுகள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன.

எனவே அவர்கள் ஒரு டோஸ் ஏற்றவேண்டுமா இரண்டு டோஸ் ஏற்றவேண்டுமா என்பதைத் தீர்மானித்து அறிவிப்பார்கள். அதனை விட வேறு முடிவு எடுப்பது ஆபத்தானது, என்றார். (ஒ.5.இ)

# இலங்கையில் இரண்டு மாதத்தில் 6 மில்லியன் தடுப்பூசிகள் உற்பத்தி

கொழும்பு, ஜூன் 3

இலங்கையில் சைனோஃபோர்ம் தடுப்பூசி உற்பத்தி செயன்முறை வெற்றியளிக்குமாக இருந்தால் இன்னும் இரண்டு மாதத்தில் அதாவது ஓகஸ்ட் மாதத்தில் 6 மில்லியன் தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



உள்ளூர் தடுப்பூசி உற்பத்தி தொடர்பான குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் முதல் தடவையாக, நீதி அமைச்சின் வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் நீதி அமைச்சர் அலி சப்ரி, மருந்துகள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன ஆகியோர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கை ஏனைய நாடுகளிமிருந்து பெருமளவு தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்கின்றது. உள்நாட்டு உற்பத்திப் பொறிமுறையின் ஊடாக தற்போது நடைபெறும் தடுப்பூசி ஏற்றல் செயன்முறையில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று கலந்துரையாடப்பட்டுள்ளது.

தடுப்பூசி உற்பத்தி மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஒரு சில நாடுகள் இந்த உற்பத்திச் செயன்முறைகளில் ஈடுபடுகின்றன. அத்தகைய ஓர் நாடாக இலங்கையும் இருப்பதே நோக்கம் என்று இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் தடுப்பூசி ஏற்றும் செயன்முறையை விரைந்து முடிப்பதற்கும், தடுப்பூசியைக் கொள்வனவு செய்வதற்காக ஏனைய நாடுகளுக்குச் செலவாகும் அந்நியச் செலாவணியை மீதப்படுத்துவதற்கும், உலக சந்தையில் தடுப்பூசி விலை அதிகரிப்பு போன்ற காரணங்களால் இலங்கையில் தடுப்பூசி உற்பத்தியை தொடங்கத் தீர்மானிக்கப்பட்டமை இதன்போது குறிப்பிடப்பட் டுள்ளது. உற்பத்தி செயன்முறை வெற்றிகரமாக அமைந்தால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 மில்லியன் தடுப்பூசிகளையும், செப்ரெம்பர் மாதம் 7 மில்லியன் தடுப்பூசிகளையும் உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் தடுப்பூசியான சைனோஃவொக் தடுப்பூசியை கண்டியில் உற்பத்திசெய்வதற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது. உலக சுகாதார நிறுவனம் சைனோஃவொக் தடுப்பூசிக்கு நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5.இ)

## முதியோர் இல்லங்களில்

# தங்கியுள்ளவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுங்கள்

### சமூகசேவைகள் திணைக்களம் சுகாதார அமைச்சிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 3

இலங்கையில் 350 முதியோர் இல்லங்களில் 9 ஆயிரம் முதியோர்கள் தங்கியுள்ளனர். அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சமூக சேவைகள் திணைக்களம், ஆரம்ப சுகாதார, தொற்றுநோய்கள் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளேயிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கடிதம் நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என சமூகசேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரும், முதியோருக்கான தேசிய செயலகத்தின் இயக்குநருமான சந்தன ரணவீர தெரிவித்தார்.

'தடுப்பூசி ஏற்றப்பட வேண்டிய முதியோர் தொடர்பான பட்டியலை இராஜாங்க அமைச்சர் எங்களிடம் கோரியிருந்தார்.


அதற்கு அமைவாக இலங்கை முழுவதிலும் உள்ள 350 முதியோர் இல்லங்களில் தங்கியுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட 9 ஆயிரம் பேரின் பெயர் விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன' என்றார். (ஒ.5.இ)

# தெளிவூட்டல் வழங்கியே கையெழுத்து பெறப்படும்

## கூறுகின்றார் நாமல்



கொழும்பு, ஜூன் 3



தடுப்பூசி தொடர்பில் பொதுமக்களைத் தெளிவுபடுத்திய பின்னரே அவர்களிடம் கையெழுத்துப் பெறப்படுகின்றது என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் வாரங்களில் 15 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கவுள்ளன. குறித்த தடுப்பூசிகள் உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளுக்கு அமைவாக மக்களுக்குச் செலுத்தப்படவுள்ளன.

தடுப்பூசியொன்று செலுத்தப்படும்போது, அதற்கு தான், எவ்வித்திலும் எதிர்ப்பு இல்லை என்று தெரிவிக்கும் வகையில், ஆவணமொன்றில் கையெழுத்து வாங்கப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும்.

தடுப்பூசியின் தன்மை தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியதன் பின்னர், அது தொடர்பாக கையெழுத்தைப் பெறுவது சுகாதார அதிகாரிகளின் கடமையாகும். இதில் ஏதேனும் சிக்கல்கள் இருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமே கேட்டுத் தெளிவு பெறலாம் - என்றார். (ம-4)

# 17 லட்சம் பேருக்கு இதுவரை தடுப்பூசி

கொழும்பு, ஜூன் 3

நாட்டில் இதுவரை 17 லட்சம் பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களில் ஏழு லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசியும், 9 லட்சத்து 25 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு முதலாவது கொவிஷீல்ட் தடுப்பூசியும், 26 ஆயிரத்து 821 பேருக்கு 'ஸ்புட்னிக் -வி' தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளன.

மேல் மாகாணம் உட்பட நாட்டின் 9 மாவட்டங்களில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அதேவேளை நாட்டுக்குத் தேவையான மேலும் 34 லட்சம் தடுப்பூசிகளை அரசு கொள்வனவு செய்யவுள்ளது. அத்துடன், அடுத்த வாரமளவில் 10 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கவுள்ளன என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-4)

# மருந்துகளை நிர்ணயிக்க அரசியல்வாதிகள் யார்?

## ராஜித விசனம்

கொழும்பு, ஜூன் 3

இலங்கையில் தடுப்பூசியின் மருந்தளவை நிர்ணயிக்கும் மருத்துவர்களாக அரசியல்வாதிகள் மாறும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன விசனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாம் மருந்தளவு தேவையில்லை என்று நோயாளிகளிடம் கையொப்பங்களைப் பெற்றுக் கொண்டது நீதியானதல்ல. நோயாளிகளுக்கான தடுப்பூசி மருந்தளவை நோயாளிகள் தீர்மானிக்க முடியாது. அதனை மருத்துவர்களே தீர்மானிக்க வேண்டும். எனினும் இலங்கையில் அரசியல்வாதிகளே நோயாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தடுப்பூசிகளின் மருந்தளவைத் தீர்மா னிக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

இவ்வாறான நிலைமை நீடித்தால் எதிர்காலத்தில் மருத்துவர்கள் பரிந்துரைக்கும் மருந்துகளை நோயாளிகள் தங்களுக்கு ஏற்ற வகையில் எடுத்துக் கொள்ளக் கூடும். சீனாவிடமிருந்து தடுப்பூசி பெற்றுக்கொண்ட போது ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளது.

பங்களாதேஷை விடவும் இலங்கை கூடுதல் தொகைக்கு தடுப்பூசிகளைக் கொள்வனவுசெய்துள்ளது. அதனை நேரடியாக பங்களாதேஷ் வெளிப்படுத்தவில்லை - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேவிபுரத்தில் குண்டு வெடிப்பு: குடும்பப்பெண் ஒருவர் காயம்

முல்லைத்தீவு, ஜூன் 3
வீட்டின் நிலத்தில் புதைந்து கிடந்த வெடிபொருள் வெடித்ததில், சிறுகாயங்களுக்கு உள்ளான குடும்பப்பெண் ஒருவர் பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
சம்பவம் புதுக்குடியிருப்பு-தேவிபுரம் கிராமத்தில் நேற்று இடம்பெற்றது. கலையரசன் கேதா (வயது - 39) என்ற குடும்பப்பெண்ணே இவ்வாறு காயமடைந்தார்.
குறித்த பெண், வீட்டுத் தோட்டம் செய்வதற்காக மண்வெட்டியால் நிலத்தைப் பண்படுத்த முற்பட்ட போது, இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ப-19)

## கசிப்பு உற்பத்தி நிலையம் பாலாவி தெற்கில் முற்றுகை

சாவகச்சேரி, ஜூன் 3
கொடிகாமம், பாலாவி தெற்கு சுடலைப் பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் இராணுவத்தினரால் நேற்று முற்றுகையிடப்பட்டது.
இதன்போது 10 போத்தல் கசிப்பு, 300 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் என்பவை கைப்பற்றப்பட்டன.
கைப்பற்றப்பட்ட பொருள்கள் இராணுவத்தினரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. சந்தேகநபர்கள் தப்பிஓடிய நிலையில் அவர்களை தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஐ-26)

## கண்டாவளையில் நடமாடும் வங்கிச் சேவையை ஏற்படுத்துக

கிளிநொச்சி,ஜூன் 3
பயணக் கட்டுப்பாட்டை அடுத்து கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்களில் பொதுமக்களின் நலன் கருதி நடமாடும் இலங்கை வங்கிச்சேவையை நடத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
பயணக் கட்டுப்பாடு காரணமாக கிளிநொச்சி கண்டாவளையின் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வங்கிகளுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று கவலை தெரிவித்துள்ளனர்.
கிளிநொச்சி பரந்தனிலும் முல்லைத்தீவின் விசுவமடுவிலும் வங்கிகள் இயங்கும் நிலையில் பெரியகுளம், தருமபுரம், கண்டாவளை மற்றும் நாகேந்திரபுரம் உள்ளிட்ட கிராம மக்கள் பரந்தனில் உள்ள வங்கிகளுக்குச் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.
நெத்தலியாற்றுப் பாலத்தில் இராணுவ சோதனை சாவடிகளைத் தாண்டி விசுவமடு வங்கிகளுக்கும் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது.
பணம் கையில் இல்லாததன் காரணமாக அத்தியவசிய பொருள்களைக்கூட வாங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த அப் பகுதி மக்கள் பணத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கண்டாவளை கிராமங்களில் நடமாடும் இலங்கை வங்கிச்சேவையை நடத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-13)

## மாம்பழங்களை சந்தைப்படுத்த நடவடிக்கை

*அங்கஜன் எம்.பி உறுதி*

கிளிநொச்சி, ஜூன் 3
சந்தைப்படுத்த முடியாத நிலையில் காணப்படும் ட்ரொம் ஈ ஜேசி மாம்பழங்களைச் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விவசாயிகளுக்கு உறுதியளித்துள்ளார்.
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் சந்தைப்படுத்த முடியாத நிலையில் காணப்படும் ட்ரொம் ஈ ஜேசி மாம்பழங்களை சந்தைப்படுத்த நடவடிக்கை எடுத்துத் தருமாறு விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.
குறித்த பிரச்சினைகள் தொடர்பில் நேற்று முழங்காவில் பகுதிக்கு பயணம் செய்த அங்கஜன் இராமநாதன் கள நிலைமைகளை ஆராய்ந்ததுடன், விவசாயிகளின் பாதிப்பக்கள் தொடர்பிலும் கேட்டறிந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ப)

## வலயக் கல்விப்பணிப்பாளர் மீதான தாக்குதல் ஓர் இழிவானசெயல்

### கிளி.மக்கள் சிந்தனைக்களம் கண்டனம்

**கிளிநொச்சி, ஜூன் 3**
**கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் மீதான தாக்குதல் ஓர் இழிச்செயல் அதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என கிளிநொச்சி, மக்கள் சிந்தனைக்களம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
அரச அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தமது சேவைகளைத் தடையின்றி மேற்கொள்வதற்கு சமூக மட்டத்திலான ஒத்துழைப்புக்களும் விமர்சனங்களும் அத்தியாவசியமானவை. அவர்களின் பணி மக்கள் திரள் ஊடாக நாட்டின் வளர்ச்சிக்கு உந்துதலாக அமைய பாதுகாப்பான பணிச்சூழல் முக்கியமானதாகும். மாறாக அவர்கள்மீதான எந்த வன்முறைத் தாக்குதல்களும் கண்டிக்கத்தக்கன. கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன் மீது ஓய்வுபெற்ற பணியாளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மனித நாகரிகத்துக்கு அப்பாற்பட்ட இழிச்செயலாகும். அளிக்கப்பட வேண்டிய சேவைகள் தொடர்பில் குறைபாடுகள் மற்றும் விமர்சனங்கள் காணப்படின் அவை அங்கீகரிக்கப்பட்ட கலந்துரையாடல்கள், விண்ணப்பங்கள் மூலமாக முன்வைக்கப்பட்டு தீர்வு பெறப்பட வேண்டும். மாறாக தனிநபர் மீதான, நிறுவனம் மீதான தாக்குதலாக அவை உருமாற்றப்படுதல் பகிரங்க அதிகார சபைகளின் செயற்பாடுகளை அச்சுறுத்துவதுடன் முடக்கநிலைக்கு இட்டுச் செல்லவே வழிவகுக்கும். மாணவர் மையக்கல்வி விருத்தியை பிரதான இலக்காகக் கொண்ட கல்விச் சமூகத்தின் பணியாட் தொகுதிக்குள்ளே நிகழ்ந்த அநாகரிகமான இந்தத் தாக்குதல் கண்டிக்கத்தக்கது என்பதுடன் இது பூரண விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தாக்குதலாளிமீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ப-214)



## ஏற்றுமதியாகின பூசணிக்காய்கள்

கிளிநொச்சி, ஜூன் 3
கிளிநொச்சி-கண்ணகைபுரம் கிராமத்தில் தேங்கிய நிலையில் காணப்பட்ட பூசணிக்காய்கள் அனைத்தும் ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளன. கடந்த 15 நாள்களுக்கு முன்னர் கண்ணகைபுரம் கிராமத்தில் 75ஆயிரம் கிலோகிராம் பூசணிக்காய்கள் ஏற்றுமதி செய்ய முடியாமல் இருந்தன. இதனால் விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டனர். இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் மேலதிக இணைப்பாளர் கே.நுசாங்கன் கண்ணகைபுரம் கிராமத்துக்குச் சென்று விவசாயிகளின் நெருக்கடி நிலைமைகளை பார்வையிட்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்கு கொண்டுவந்தார். மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களின் பயனாக அந்தப் பூசனிக்காய்கள் அனைத்தும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தம்புள்ள மற்றும் மாவட்டத்தில் உள்ள நிறுவனங்களுக்கே அவை ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளன. (ப-13)

## தனியான கிராம அலுவலர் பிரிவாக வலைப்பாடு கிராமத்தை மாற்றுக

*மக்கள் கோரிக்கை*

கிளிநொச்சி, ஜூன் 3
தனியான கிராம அலுவலர் பிரிவை உருவாக்கித் தருமாறு கிளிநொச்சி வலைப்பாடு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வலைப்பாட்டு பகுதிக்குப் பயணம்செய்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனிடம் அந்தப் பகுதி மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.
மக்கள் தொகை இல்லாத கிராமமான பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவில் உள்ள வலைப்பாடு கிராமத்தில் 400 குடும்பங்கள் உள்ளன.
எனவே இந்தக் கிராமத்தை தனியான கிராம அலுவலர் பிரிவாக மாற்றித் தாருங்கள் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். எல்லை நிர்ணய குழுவிடம் குறித்த விடயம் முன்வைக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும் என இது தொடர்பில் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். (ப-6)

## புதூர் நாகதம்பிரான் பொங்கலுக்கு 15 பேருக்கு மட்டும் அனுமதி

வவுனியா,ஜூன் 3
வரலாற்று பிரசித்திபெற்ற வவுனியா - புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கல் வழிபாட்டுக்கு 15 பேருக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
புளியங்குளம் புதூர் நாகரம்பிரான்ஆலய வருடாந்த பொங்கல் வழிபாடு எதிர்வரும் ஏழாம் திகதி நடைபெறவுள்ளது.
குறித்த நிகழ்வை நடத்துவது தொடர்பாக வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது.
இதன்போது கொரோனா வைரஸ் பரவலைக்கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட வகையில் குறித்த நிகழ்வை நடத்துவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.
இதன்படி சிறப்பு பூசைகள் மற்றும் கிரியைகளை முன்னெடுக்கும் 15 பேருக்கு மாத்திரம் பொங்கல் நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
குறித்த கலந்துரையாடலில் வவுனியா வடக்கு பிரதேச செயலர், புதூர் ஆலய நிர்வாகத்தினர், வவுனியா வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-110)

## கோட்டைகட்டியகுளம் வீதியின் இருபுறப் பற்றைகளும் துப்புரவு


முல்லைத்தீவு,ஜூன் 3
முல்லைத்தீவு-துணுக்காய் பழையமுறிகண்டியில் இருந்து கோட்டை கட்டியகுளம் வீதியின் இரு புறங்களிலும் காணப்பட்ட பற்றைகள் துப்பரவு செய்யப்பட்டன. துணுக்காய் பிரதேச சபையின் நிதிமூலம் சுமார் மூன்று கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதியே துப்பரவு செய்யப்பட்டது.
குறித்த வீதியில் காணப்பட்ட பற்றைகளுக்குள் காட்டு யானைகள் மறைந்திருந்து போக்குவரத்தில் ஈடுபடும் மக்களை அச்சுறுத்தி வருகின்றன என பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்தே குறித்த வீதியில் காணப்பட்ட பற்றைகள் அகற்றப்பட்டன. (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 தொழிற்சங்கங்கள் இன்று வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜுன் 3

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் நோயாளிகள் பராமரிப்பின்போது உரிய பாதுகாப்பு வசதிகளை வழங்க வேண்டும் என்பவை உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து, சுகாதார சேவையைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.



இது தொடர்பில் அரச தாதிமார் சங்கத்தின் தலைவர் சமன் ரட்ணப்பிரிய தெரிவிக்கையில், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வரும் போதே, அவர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டியுள்ளதால், சுகாதார சேவைகள் மோசமாகப் பாதிக்கப்படலாம் என்று எச்சரித்திருந்தோம். தற்போது சுகாதார சேவையைச் சேர்ந்த ஆயிரம் பேராவது தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்றாளர்களுக்கு சேவை வழங்கும்போதே இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சு தனது ஊழியர்களுக்கு தரமான முகக்கவசத்தை வழங்கவில்லை. கொரோனாத் தொற்றாளர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்கள் பயன்படுத்தும் பாதுகாப்பு அங்கிகள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரச சேவையில் உள்ள கர்ப்பிணிகளுக்கு சம்பளத்துடனான விடுப்பை வழங்குவது தொடர்பில் சுற்றறிக்கை வெளியாகியுள்ள போதிலும், சுகாதார சேவையைச் சேர்ந்தவர்கள் இதற்குள் உள்ளடக்கப்படவில்லை. அதனால் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது- என்றார். (ம-4)



## நாட்டின் வளங்களை சூறையாடுகிறது அரசு

*ஹர்ஷன ராஜகருணா சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜுன் 3

கொழும்பில் உள்ள பெறுமதியான இடங்களை அரசு சூட்சுமமாக விற்பனைசெய்வதற்குத் தயாராகி வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஒரு அங்குலத்தைக்கூட வெளிநாட்டவர்களுக்கு விற்பனைசெய்யப் போவதில்லை என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தது இந்த அரசு. ஆனால் தற்போது அவர்களிடமிருந்து நாட்டின் பெறுமதிமிக்க இடங்களைப் பாதுகாக்க வேண்டிய நிலைமை எமக்கு ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் பெறுமதியான இடங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனைசெய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கோத்தாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு நிதியைச் செலவிட்ட நண்பர்களை மகிழ்விப்பதற்காகவே, நாட்டின் வளங்களை விற்பனைசெய்கின்றனர் -என்றார். (ம-4)

## பெண்கள் சிறையில் சிக்கிய பொருள்கள்

கொழும்பு, ஜுன் 3

வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில், உள்ள கால்வாய் ஒன்றிலிருந்து, அலைபேசிகள் அடங்கிய பொதியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது. அந்தப் பொதியில் 10 அலைபேசிகள், 14 அலைபேசி மின்கலங்கள், 11 சிம் அட்டைகள், அலைபேசி மின்னேற்றியொன்று உள்ளிட்ட மேலும் பல பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலதிக விசாரணைகளுக்காக கைப்பற்றப்பட்ட பொருள்கள் பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ம-4)

## சட்டத்தரணிகளின் உரிமைகள் மீறப்படுகின்றன

*சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்*

கொழும்பு, ஜுன் 3

தடுத்து வைக்கப்படும் தமது சேவைபெறுநரை சந்திக்கச் செல்லும் சட்டத்தரணிகளுக்கு, அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம், பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

குற்றப்புலனாய்வுத் துறையினர் மற்றும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அவர்களது சட்டத்தரணிகள் மற்றும் அவர்களின் அணுகல் உரிமை மறுக்கப்படுகிறது என வருவதாக சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

'சட்டத்தரணிகள் தமது சேவைபெறுநரைச் சந்திக்கும்போது அது ஒலி மற்றும் ஒளிப்பதிவுசெய்யப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

மேலும் சட்டத்தரணிகளுக்கும், சேவைபெறுநருக்கும் இடையிலான இடைவெளிக்கு நடுவே பொலிஸ் அதிகாரிகள் அமர்ந்திருந்து கண்காணித்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இவை தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் உரிமைகளையும் மீறும் வகையில் உள்ளன' என்று சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ.5,இ)



## கப்பல் தீப்பற்றிய விவகாரம் நாட்டைவிட்டு வெளியேற மூவருக்குத் தடையுத்தரவு

கொழும்பு, ஜுன் 3

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் பிரதான மாலுமி, பிரதான பொறியியலாளர் மற்றும் மேலதிக பொறியியலாளர் ஆகிய மூவரும் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகேயால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த கப்பல் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், குற்ற விசாரணைப் பிரிவினரின் கோரிக்கைக்கமைவாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-4)



## கொழும்புக்குள் போலியான கடிதங்களுடன் நுழைந்தால் 5 வருடச்சிறை

கொழும்பு,ஜுன் 3

போலியான கடிதங்களைக் காண்பித்து, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி, கொழும்புக்குள் நுழையும் நபர்களுக்கு ஐந்து வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்க முடியும். இதற்கு மேலதிகமாக ஐயாயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிறுவனங்களின் பிரதானிகளால் தாங்களும் கடமைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்ற காரணத்துடன் போலியான கடிதங்களுடன் பலர் கொழும்பு மாவட்டத்துக்குள் நுழைந்துள்ளனர். கடந்த மாதம் 31ஆம் திகதியன்று இவ்வாறு அதிக சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவங்கள் நிரூபிக்கப்பட்டால், தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4)

## புத்தளம் நகர சபையின் புதிய தவிசாளராக ரபீக்

புத்தளம், ஜுன் 3

புத்தளம் நகர சபையின் புதிய தவிசாளராக, உறுப்பினர் ரபீக்கை நியமிப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. புத்தளம் நகர சபையில் மூன்று தடவைகள் தவிசாளராகப் பதவி வகித்த கே.ஏ.பாயிஸ் விபத்தொன்றில் உயிரிழந்தார். அவருடைய வெற்றிடத்துக்கே ரபீக் நியமிக்கப்படவுள்ளார்.

புத்தளம் நகர சபையின் தவிசாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களோடும், கட்சியின் புத்தளம் நகர சபையின் உறுப்பினர்களோடும் கலந்துரையாடப்பட்டது. அதனடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்படுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய தபாலகத்தில் குவிந்துள்ள கடிதங்கள்



கொழும்பு, ஜூன் 3
கொழும்பு மத்திய தபாலகத்தில் அதிகளவான கடிதங்கள் குவிந்துள்ளன என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால், இவ்வாறு கடிதங்கள் தேங்கியுள்ளன. இதனால், மருந்துகள் விநியோகமும் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பயணக் கட்டுப்பாடு நீக்கப்படும் வரை சேவையில் ஈடுபட முடியாது என்று தபால் ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தபால் ஊழியர்களை சேவைக்கு அழைப்பது அபாயகரமானது என்பதால், பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்ட பின்னர், தபால் விநியோகத்தை ஆரம்பிக்குமாறு, தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது. (ம-4)

# பதுக்கிய பசளைகளை விற்பனைக்கு விடுங்கள்

## வர்த்தகர்களுக்கு அறிவிப்பு



**கொழும்பு, ஜூன் 3**

**மறைத்து வைத்துள்ள அனைத்து இரசாயனப் பசளைகள் மற்றும் பூச்சிகொல்லிகளை சந்தைகளில் விற்பனைக்குவிடுமாறு அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் மொஹான் சமரநாயக்க அறிவித்துள்ளார்.**

இரசாயனப் பசளைகள் மற்றும் பூச்சிகொல்லிகளை இறக்குமதி செய்வது அரசால் தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே இவற்றைப் பதுக்கி வைத்திருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. பசளை வர்த்தகர்களால் ஆரம்பத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பசளைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்று அறிகின்றோம். எனவே அவற்றை சந்தைக்கு விடுவிக்க வேண்டும் என்று வர்த்தகர்களைக் கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# துறைமுக சட்டவரைவால் தமிழ்நாட்டுக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஜூன் 3
இலங்கையில் கொழும்பு துறைமுக ஆணைக்குழு சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டதை அடுத்து, தமிழ் நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. புலனாய்வுத்துறை வழங்கிய தகவலை அடுத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)



# பசளைகளின் தரம் சோதனை

கொழும்பு, ஜூன் 3
இறக்குமதி செய்யப்படும் பசளைகளின் தரம் தொடர்பில், மூன்று ஆராய்ச்சி நிலையங்கள் சோதனையில் ஈடுபடவுள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பல சுகாதார சிக்கல்களுக்குக் காரணமான இரசாயனப் பசளைகள் இறக்குமதியைத் தடைசெய்து, சேதனப்பசளையை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ம-4)

# கொழும்புக்குள் நுழையும் வாகனங்களுக்கு ஸ்டிக்கர்



கொழும்பு, ஜூன் 3
கொழும்புக்குள் நுழையும் வாகனங்களுக்கு, ஒரு நாளுக்கு மட்டும் செல்லுபடியாகும் ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கம்பஹா, பாணந்துறை, நுகேகொடை, வத்தளை மற்றும் கல்கிஸை ஆகிய பகுதிகளில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஒரு வாகனத்தை பல தடவைகள் சோதனைக்கு உட்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# பதிவுத் திருமணத்துக்கு கட்டணம் அதிகரிப்பு

இலங்கையில் பதிவுத் திருமணங்களுக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. பொது திருமணப்பதிவுச் சட்டத்தின் அடிப்படையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பதிவாளர் நாயகம் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக பதிவாளர் அலுவலகம் அல்லது வெளியிடங்களில் விவாகப்பதிவு செய்வதற்கான கட்டணம் 100 ரூபாவில் இருந்து 120 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்படுகின்ற திருமணத்துக்கான கட்டணம் 750 ரூபாவில் இருந்து 900 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

விவாகப் பதிவுக்கான பதிவாளர் உறுதிச்சான்றை வழங்குவதற்கான கட்டணம் 100 ரூபாவில் இருந்து 120 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் பதிவாளர் நாயகம் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம-4)

# இத்தாலிச் சிறையில் இலங்கையர் இறப்பு!



கொழும்பு, ஜூன் 3
இத்தாலி தலைநகரின் தெற்கே ப்ரோசினோனில் உள்ள சிறைச்சாலையில், இலங்கையர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது மனைவியை ரோம் நகர வீதியில் வைத்து கொலைசெய்த 49 வயதான, தென்னிலங்கையைச் சேர்ந்த பராமரிப்பு ஊழியர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் தனது மனைவியை கடந்த சனிக்கிழமை ரோம் நகர வீதியில் வைத்து குத்திக் கொலை செய்துள்ளார். இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டிருந்தார். எனினும் கொலைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம-4)

# வெளிநாட்டுப் பயணிகளுக்கான தனிமைப்படுத்தலில் மாற்றமில்லை



கொழும்பு, ஜூன் 3
இலங்கைக்கு வருகைதரும் அனைத்து வெளிநாட்டுப் பயணிகளும், சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி 14 நாள்கள் கட்டாயத் தனிமைப்படுதலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று சிவில் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கு வருகைதரும் பயணிகள் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்திய பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையுடன் வருகைதரவேண்டும். கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்கள் ஊடாக இவ்வாறு வருகைதரும் பயணிகள் மற்றொரு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

பின்னர் அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்படுவர். அவர்களுக்கு சுமார் 10 நாள்களில் மற்றொரு பி.சி.ஆர். பரிசோதனையும் செய்யப்படும். அந்த அறிக்கையில் அவர்களுக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தினால், அவர்களை சமூகத்துக்குள் விடுவிப்போம். என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதியாக்கப்பட்டுள்ளார் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர்

## அவரை முதலில் விடுக்கவேண்டும் என சாணக்கியன் எம்.பி கிண்டல்

**மட்டக்களப்பு, ஜூன் 3**
**மட்டக்களப்பு, மாவட்டச் செயலர் தான் இந்த மாவட்டத்தில் முதல் அரசியற் கைதி. அவரை நாங்கள் முதலில் விடுவிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்;
நாட்டில் தற்போது நிலவும் கொவிட் 19 தொற்றை அரசியல் செய்யும் வேலைத் திட்டமாகவே இந்த அரசு பயன்படுத்து கின்றது. இவ்வாறான விடயங்களை நாங்கள் முன்வைக்கும்போது சமூக வலைதளங்களில் ஒரு சிலர் எங்கள் மீது விமர்சனங்களை முன்வைக்கின் றார்கள்.
எமது மாவட்டத்தில் தற்போதையை கொவிட் 19 தொடர்பான எந்தவிதமான கூட்டங்களுக்கும் எனக்கும் சக நாடா ளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரத் துக்கும் அழைப்புகள் விடுப்பதில்லை. மாவட்டச் செயலரோ, பிரதேச செயலா ளர்களோ இதுவரை காலத்தில் கொவிட் தொடர்பான எவ்வித கூட்டங்களுக்கும் எமக்குத் தெரியப்படுத்தியதில்லை. எமது மாவட்டத்தைச் சேர்ந்த ஆளுந் தரப்பு பிரதிகள் இருவரும் கொவிட் சிகிச்சை நிலையங்களைத் திறப்பு விழா வாகச் சித்தரிப்பதை நாங்கள் பார்க்கக் கூடியதாக உள்ளது. அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தொற்றுக் குள்ளான சிலருக்குத் தங்குவதற்குக் கூட இடங்கள் இல்லாமல் இருக்கின் றது. துணிச்சலாக ஒரு சிலர் இவற்றை வெளிப்படுத்துகின்றார்கள். இதுபோல் எத்தனை பேர் இருக்கின்றார்களோ தெரியவில்லை.
எமது மாவட்டச் செயலர், ஒரு அடிமை யாக, கைதியாகப் பயன்படுத்தப்படுகின் றார். மாவட்டச் செயலர் தான் இந்த மாவட்டத்தில் முதல் அரசியற் கைதி. அவரை நாங்கள் முதலில் விடுவிக்க வேண்டும். அதாவது அவர் ஒரு அர சியற் கைதியாக பிள்ளையான், வியா ழேந்திரனிடத்தில் சிக்கிக் கொண்டிருகக் கின்றார் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் எமது மாவட்டத்தில் சக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பில்லாமல் கொவிட் ஒழிப்புச் செயற்றிட்டங்களை அவர்கள் செய்கின் றார்கள் என்றால் அதனை என்ன வென்று சொல்வது. அரசால் வழங்கப் படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மத்திய கிழக்கில் இருப்பவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படமாட்டாது என்று கூறப்பட்டுள்ளது என்று அறிந் தேன். அந்த நாடுகளில் அவர்கள் இலங்கைக்கு வரமுடியாமல் எத்த னையோ நாள்களாக கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக் கும் சேர்த்து இக் கொடுப்பனவு வழங் கப்பட வேண்டும். இந்தக் கொடுப்பனவு முறையாக வழங்கப்பட வேண்டும். அதை விடுத்து மாவட்டச் செயலரி னதோ, பிரதேச செயலாளர்களினதோ, அல்லது, மாவட்டச் செயலரை அடிமை யாக வைத்திருக்கும் அரசியல்வாதி களின் விருப்பத்துக்கோ வழங்கப்படக் கூடாது - என்றார். (ப)

## 24 மணி நேரத்தில் 62 பேருக்கு தொற்று

### திருமலையில் இந்த நிலை

திருமலை, ஜூன் 3
திருகோணமலை மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் நேற்றுமுன்தினம் காலை 10 மணி வரையான கடந்த 24 மணிநேரத்தில் 62 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று திருகோ ணமலை சுகாதாரப் பிரிவினர் தெரி வித்தனர்.
இந்தக் காலப்பகுதியில் மொத்தமாக மூன்று இறப்புகள் பதிவாகியுள் ளன. மாவட்டத்தில் இதுவரை மொத் தமாக 3 ஆயிரத்து 425 தொற்றா ளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள் ளனர். மே மாதமளவில் மாத்திரம் ஆயிரத்து 984 கொவிட் தொற்றா ளர்கள் அடையாளம் காணப்பட்டுள் ளனர் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ப)



### தொற்றாளருடன் தொடர்பு;

## திருமண நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் தனிமைப்படுத்தலில்

மட்டக்களப்பு. ஜூன் 3
கொரோனாத் தொற்றாளருடன் தொடர்பு பட்ட சிலர் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டதால், திருமண நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று கோறளைப்பற்று சுகாதாரப் பிரிவி னர் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கோற ளைப்பற்று மத்திய சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை நான்காம் வட்டாரத்தில் இடம்பெற்றுள்ளது. கோறளைப்பற்று மத் திய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொரோ னாத் தொற்றாளராக ஒருவர் அடையாளம் காணப்பட்டார். இவருடன் தொடர்பைப் பேணியவர்கள் விபரம் திரட்டப்பட்டது. குறித்த திருமண நிகழ்வில் கலந்துகொண்ட சிலர் அந்த விவரத்தினுள் காணப்பட்டதால், அந்த நிகழ்வில் கலந்துகொண்ட அனை வரும் தனிமைப்படுத்தப்பட்டனர். (ப-150)

### முடக்கப்பட்டு 18 நாள்கள் கடந்தபோதும்

## இதுவரை விடுவிக்கப்படாத 12 கிராம அலுவலர் பிரிவுகள்

திருகோணமலை,ஜூன் 3
கிண்ணியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 12 கிராம அலுவ லர் பிரிவுகள் முடக்கப்பட்டு 18 நாள்கள் கடந்த நிலையிலும் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.
கொரோனாத் தொற்று காரணமாக முடக்கப்பட்ட பல கிராம அலுவலர் பிரிவுகளில் தொற்றாளர் எண்ணிக்கை குறைவு என்பதால் 7 நாள்கள், 14 நாள்கள் என்ற கால அடிப்படை யின் பின் விடுவிக்கப்பட்டுள்ளன. கிண்ணியாவில் இவ்வாறு முடக்கப்பட்ட பகுதிகள் இதுவரை விடுவிக்கப்படாததால் மக்க ளின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே முடக்கப்பட்ட பகுதிகள் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் என்று கிண்ணியா நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ-இ)

## கல்முனையில் உருவாக்கப்பட்டது கொரோனாத் தடுப்புச் செயலணி


கல்முனை, ஜூன் 3
கல்முனைப் பிரதேசத்துக்கான கொரோனாத் தடுப்புச் செய லணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்தச் செயலணியால் அவதானிப்படும் விடங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.
நாட்டில் கொரோனா பரவல் நிலை அதிகரித்துள்ளதால், ஒவ்வொரு பிரதேசங்களிலும் பிரதேச மக்களை அடிப்படை யாகக்கொண்ட கொரோனாத் தடுப்புச் செயலணி உருவாக் கப்பட்டுள்ளது. அந்த வகையில் கல்முனை தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தால், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், முப்படையினர் மற்றும் பிரதேச செயலகத்தி னர் ஆகியோரின் அனுசரணையுடன் கொரோனாத் தடுப்புச் செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
பொதுமக்களின் நலன் கருதி உருவாக்கப்பட்டுள்ள இச் செய லணிக்கு கல்முனை மக்கள் முற்றுமுழுதான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.
இச் செயலணி, பின்வரும் விடயங்கள் தொடர்பாக அவதா னமாக இருக்கும் என்பதுடன் நேற்றுமுதல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு அதனை மீறுவோருக்கு எதிராக சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.
அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த வேறு எந்த தேவைகளுக் காகவும் வீதிகளில் வாகனங்களில் பயணித்தல், இளைஞர் கள் குழுக்களாகச் சேர்ந்து மோட்டார் சைக்கிள்களில் வீதிக ளில் வீணாகச் சுற்றித்திரிதல், மீன்பிடிப்பவர்களைத் தவிர ஏனையோர் கடற்கரைகளில் அநாவசியமாகக் கூடி இருத் தல், அத்தியாவசிய பொருள்களுக்காக அனுமதிக்கப்பட்ட இடங்களில் அதிகமானோர் கூடி இருத்தல், வீதிகள் மற்றும் மைதானங்களில் இளைஞர்கள் விளையாட்டுக்களில் ஈடுப டுதல், சரியான முறையில் சுகாதார நடவடிக்கைகளை பின் பற்றாமை, மற்றும் வெளியிடங்களில் இருந்து யாசகம் கேட்டு வருபவர்களைத் தடை செய்தல் போன்ற விடயங்களுக்கு எதிராகவே சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ப)



பயணக் கட்டுப்பாட்டால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 'ஜகமே தந்திரம்'





## வெளியானது டிரெய்லர்

பேட்ட படத்தை தொடர்ந்து கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் உருவாகி உள்ள திரைப்படம் 'ஜகமே தந்திரம்'. தனுஷ் ஹீரோவாக நடித்துள்ள இந்தப் படத்தில், அவருக்கு ஜோடியாக ஐஸ்வர்யா லட்சுமி மற்றும் சஞ்சனா நடராஜன் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்தில் பிரபல ஹாலிவுட் நடிகர் ஜேம்ஸ் காஸ்மோ முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார்.

இப்படம் வருகிற இம்மாதம் 18ஆம் திகதி நேரடியாக ஓடிடி தளத்தில் வெளியாக உள்ள நிலையில், நேற்றுமுன்தினம் இப்படத்தின் டிரெய்லர் வெளியிடப்பட்டுள்ளது. அதிரடி ஆக்ஷன் காட்சிகள் நிறைந்த இந்த டிரெய்லர், சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. குறிப்பாக அதில் தனுஷ் பேசும் "சோழர் பரம்பரையில் ஒரு லண்டன் தாதா" என்ற வசனம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.







## மர்லின் மன்றோ: விடை இல்லா விடுகதை



உலகப் புகழ்பெற்ற அமெரிக்க நடிகையும், பாடகியுமான மர்லின் மன்றோ, ஹாலிவுட்டைக் கலக்கிய அழகுப் பதுமை. விடுவிக்க முடியாத பல புதிர்களுக்குள் தன்னை ஒளித்து வைத்திருப்பவர். 1950ஆம் ஆண்டுகளில் ஹாலிவூட்டின் கனவு தேவதையாக வலம் வந்த மர்லின் மன்றோ, தனது இறுதி நாள்களில் போதைப்பொருள்களுக்கு அடிமையாகி, குடும்பப் பிரச்சினைகளால் அவதியுற்று 36 வயதில் தற்கொலை செய்துகொண்டார் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டாலும், அவரது மரணம் இன்னும் புதிராகவே இருந்து வருகிறது.

மர்லின் மன்றோ, உலக சினிமா ரசிகர்களின் கனவுகளில் உலா வந்த எழில் தேவதை. அமெரிக்காவின் Los Angelesல் 1926ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி பிறந்தார் மர்லின் மன்றோ. பெரும்பாலானோரைப் போல, மர்லின் மன்றோவின் இளமைக் காலம் இனிப்பானதாக இல்லை. பருவத்தை எட்டிவிட்டாலும், பக்குவத்தை எட்டாத 16 வயதில் திருமணம். பின்னர் விவகாரத்து எனத் தோள் வலிக்கும் தோல்விகள், அவரை தொடர்ந்த வண்ணமே இருந்தன.

1944ஆம் ஆண்டு ஒரு தொழிற்சாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, ஒளிப்படக் கலைஞர் ஒருவர் எடுத்த புகைப்படம் மர்லின் மன்றோவின் வாழ்க்கையை வேறு பாதைக்குப் பயணிக்க வைத்தது. மாடலிங் தொழிலில் காலடி எடுத்து வைத்த மர்லின் மன்றோ, தனது வசீகரத்தால், உயரம் தொட ஆரம்பித்தார்.

'The Asphalt Jungle' மற்றும் 'All About Eve' ஆகிய படங்கள் மர்லின் மன்றோவை, கனவுத் தொழிற்சாலையின் அகண்ட வானில் பறக்க வைத்தன. மர்லின் மன்றோவின் கட்டழகை ரசிகர்கள் ஏராளமானோர், மயக்கம் தெளிவிக்கும் மருந்து தெரியாமல் மகிழ்ச்சியாய் ரசித்தனர். மர்லின் மன்றோவின் நடையழகு, உடையழகு, சிகையழகு, சிரிப்பழகு உலக ரசிகர்களை அவர்பால் ஈர்க்க வைத்தது.

இவரைப் போல் இன்னொருவர் நிச்சயம் வருவார் என்ற ஹாலிவுட் திரையுலகின் எண்ணத்தைத் தோற்கடித்தது.

சற்றே மேலே பறக்கும் மேலாடையுடன் 'The Seven year Itch' என்ற திரைப்படத்துக்காக எடுக்கப்பட்ட மர்லின் மன்றோவின் ஒளிப்படம் சிறப்பாக அமைய 14 முறை ரீடேக் எடுக்கப்பட்டதாகவும், இரவு ஒரு மணிக்கு எடுக்கப்பட்ட காட்சி நிறைவுபெற 3 மணி நேரமானதாகவும், அந்தப் படத்தை எடுத்த புகைப்படக்காரர் தெரிவித்துள்ள சம்பவம், மர்லின் மன்றோவின் திரை வரலாற்றின் தித்திப்பான அத்தியாயமாக இன்றளவும் திகழ்கிறது.

பளபளக்கும் பட்டுப்புடவையின் பின்னணியில் பல்லாயிரக் கணக்கான பட்டுப் புழுக்களின் மரணம் மறைக்கப்பட்டிருப்பதைப் போல, ஒளி வீசும் கனவுத் தொழிற்சாலையின் மறுபக்கம் ஓராயிரம் மெழுகுவர்த்திகளின் கண்ணீர் ஒளிந்திருக்கிறது. அதை யாராலும் புரிந்துகொள்ள முடியாது.மர்லின் மன்றோவின் மரணமும் புரிந்துகொள்ள முடியாத புதிர். விடை கிடைக்காமல் போன விடுகதை.

## இன்றைய நாள்





**மேடம்:** மூத்தோர் ஆரோக்கியம் மேம்படும். திடீர் நட்பு உருவாகலாம். பிள்ளைகளின் முயற்சியால் பொருளாதார நிலை உயரும். பணியிட சலசலப்பைப் புன்னகையுடன் சமாளிப்பீர்கள்.



**இடபம்:** உங்களின் பெருந்தன்மையான செயல், மதிப்பை பெற்றுத் தரும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியவர்கள் விலகுவர்.



**மிதுனம்:** தடைப்பட்ட முயற்சிகள் நல்லபடியாக முடியும். எதையும் முடிவெடுக்க இயலாமல் குழப்பம் ஏற்படும். மகிழ்ச்சி அளிக்கும் செய்தி ஒன்று அலைபேசியில் வரும்.



**கடகம்:** வாழ்க்கைத்துணையின் கோபத்தைக் கிளற வேண்டாம். அனைத்து விஷயங்களிலும் கவனமாக இருப்பது மிகவும் நல்லது. யாரோடும் எந்த வம்பும் வைத்துக்கொள்ள வேண்டாம்.



**சிம்மம்:** தேவையற்ற எண்ணங்களை விலக்கி நிம்மதி அடைவீர்கள். உங்களின் கட்டளையை நிறைவேற்றக் காத்திருப்போர் அதிகரிப்பர்.



**கன்னி:** சிலர் உங்களை புரிந்து கொள்ளவில்லை என்ற ஆதங்கம் தீரும். இழப்புகள் குறையும். பதறாமல் முடிவெடுப்பது நல்லது. அதிகாரிகளைப் பகைக்காமல் வளைந்து கொடுப்பீர்கள்.



**துலாம்:** பொழுது போக்கு அம்சங்கள் மகிழ்ச்சி தரும். நல்லவர்களை இனம் காண்பீர்கள். பரபரப்பான நாளாக இருக்கும். தேவையற்ற எண்ணங்கள் அதிகமாக மனதில் அலைபாயும்.



**விருச்சிகம்:** நண்பர்கள் நற்செய்தியை தருவர். பயணம் மகிழ்ச்சி அளிக்கும். சேமிப்பை உயர்த்தும் முயற்சி நல்ல பலன் தரும். எதிர்பாராத வெற்றிச் செய்தி வந்து வியக்க வைக்கும்.



**தனுசு:** பாதியில் விட்டுப்போன முன்னேற்ற முயற்சி மீண்டும் தொடரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். சுற்றியிருப்பவர்கள் உதவுவர். மனதிடம் காரணமாக நல்ல செயல் ஒன்றை முடிப்பீர்கள்.



**மகரம்:** தாயின் ஆசையை நிறைவேற்றி மகிழ்வீர்கள். நிம்மதி பிறக்கும். திட்டம் ஒன்றை வகுத்து நிறைவேற்ற நாள் பார்ப்பீர்கள். முயற்சியின் பேரில் பணம் வரும். நட்பு வட்டம் விரியும்.



**கும்பம்:** குடும்பத்தை வெற்றிகரமாக நடத்தி சென்று நிம்மதியடைவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டுதல்கள் சற்றுக் குறைவாகக் கிடைக்கும்.



**மீனம்:** சக ஊழியர்களுக்கு உங்களின் ஆலோசனை உதவும். பண முடக்கம் நீங்கும். புதிய பாதை தென்படும். கடுமையான முயற்சியால் நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாத் தடுப்புத் திட்டம் தயாரிக்க

# சர்வகட்சி மாநாட்டை உடனே கூட்டுங்கள்

### அரசிடம் சஜித் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 3**
**இலங்கையில் சர்வ கட்சி மாநாடொன்றை உடனடியாகக் கூட்டி, கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.**



சர்வ கட்சி மாநாடொன்றைக் கூட்டுவதற்கு அரசு முன்வர வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.
நாடு இரண்டு வருட காலமாக முகங்கொடுத்துள்ள அனர்த்தத்துக்குத் தன்னிச்சையான தீர்மானங்கள் மேற்கொள்வதைவிட கூட்டு முயற்சியொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட ஏனைய நாடுகள் மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு, குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களை வகுத்திருந்தாலும், இலங்கையில் அவ்வாறான திட்டங்கள் எதுவும் இல்லை என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.
இவ்வாறான அனர்த்த நிலையில் அரசியல் இலாபங்களுக்கு அமைய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.
(த-22)



## யாழ்ப்பாண மாவட்டத்தில்


# 12,000 குடும்பங்களுக்கு நேற்று 5,000 கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்ப்பாண மாவட்டத்தில் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு நேற்று 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.
நாடு முழுவதும் அரசால் நிதி வழங்கப்பட்டுவரும் நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் உட்பட்ட பகுதிகளில் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு நேற்றுக் காலையில் இருந்து குறித்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
ஏனைய குடும்பங்களுக்கும் குறித்த நிதி வழங்கும் செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 75 ஆயிரம் குடும்பங்களுக்கு அதாவது சமுர்த்தி பெறும் குடும்பங்கள், அத்தோடு வருமானம் குறைந்த 38 ஆயிரம் குடும்பங்கள் உட்பட மொத்தமாக ஒரு லட்சத்து 52 ஆயிரம் குடும்பங்களுக்கு குறித்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
(த-20)

## ஆடைத் தொழிற்சாலையில் 74 பேர் திடீர் மயக்கம்

கொழும்பு, ஜூன் 3
கண்டி பல்லேகல முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றும் பணியாளர்களில் 74 பேர் திடீரென சுகவீனமடைந்து மயக்கமடைந்துள்ளனர். வாந்தி மற்றும் தலைவலி காரணமாக குறித்த பணியாளர்களுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது என்று மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிஹால் வீரசூரிய தெரிவித்துள்ளார்.
இவர்கள், மெனிக்ஹின்ன மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 64 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். இவ்வாறு மயக்கமடைந்தவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளது.
எனினும், தடுப்பூசிக்கும் இவ்வாறு நோய் வாய்ப்பட்டதற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. உணவு ஒவ்வாமையால் அந்தப் பணியாளர்கள் சுகவீனமடைந்திருக்கக் கூடும் என்றும் சந்தேகிக்கப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.
(த-இ)

# நேற்று மட்டும் 39 பேர் சாவு



கொழும்பு, ஜூன் 3
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 39 பேர் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் இதனை நேற்றிரவு அறிவித்துள்ளது. இதற்கமைய நாட்டில் பதிவான மொத்த கொரோனா இறப்புகளின் எண்ணிக்கை ஆயிரத்து 566 ஆக அதிகரித்துள்ளது.
(த-22)



# கப்பலில் பரவிய தீ திட்டமிடப்பட்ட சதி

### பேராசிரியர் பரபரப்புத் தகவல்

கொழும்பு, ஜூன் 3
கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றிய சம்பவம் திட்டமிடப்பட்ட சதியென்று பேராசிரியர் சந்திமா விஜயகுணவர்தன பரபரப்புத் தகவல் வெளியிட்டுள்ளார். சமூக வலைத்தளமொன்றில் இயங்கி வரும் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
குறித்த கப்பலில் இயற்கையாகவே தீவிபத்து ஏற்படவில்லை. கப்பலை வெடிக்கச் செய்துள்ளனர். அப்படியென்றால் அதுவும் ஒரு தாக்குதலாகவே கணிக்கப்பட வேண்டும். இது திட்டமிட்ட சதி. இது தீவிரவாதத் தாக்குதலுக்கு ஒப்பான செயற்பாடு என்பதால், முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
(ம-4)

# மரண அறிவித்தல்



## லயன் முத்துக்குமாரு கனகலிங்கம்

**(இளைப்பாறிய உணவுத் திணைக்கள சிரேஸ்ர உத்தியோகத்தர் - கச்சேரி, யாழ்ப்பாணம்)**

காரைநகர் களபூமி விளானையை பிறப்பிடமாகவும் 3ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம், 15, கொலிங்வுட் பிளேஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு கனகலிங்கம் (இளைப்பாறிய உணவுத் திணைக்கள சிரேஸ்ர உத்தியோகத்தர் - கச்சேரி, யாழ்ப்பாணம்) அவர்கள் 01.06.2021 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் காலம் சென்றவர்களான முத்துக்குமாரு (ஆயுள்வேத வைத்தியர்) கனகம்மா ஆகியோரின் சிரேஷ்டபுத்திரனும், காலம் சென்றவர்களான குருசுமுத்து அன்னம்மா தம்பதிகளின் (ஊர்காவல்துறை நாரந்தனை) மருமகனும் ஜேர்றுட் (இளைப்பாறிய லிகிதர் - கச்சேரி, யாழ்ப்பாணம் - கனடா) அவர்களின் அன்பு கணவரும், றூபகுமார் (கனடா) றுபந்தினி (கனடா) காலம் சென்ற றுசாந்தகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும் மற்றும் ஞானசவுந்தரம்மா, செவ்வந்தியம்மா (நேசம்), சறோஜினிதேவி, சுந்தரேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2021) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் ஜெயரட்ண மலர்சாலையில் (பொரளை) இடம்பெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 0718509137
0775142897

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்கத் தொடர்ச்சி.....

## பொருளாதார....

அனைவரதும் பங்களிப்பும் அவசியமாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி, கைத்தொழில் நிலையங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு, ஆளுநர்களிடமும் மாவட்டச் செயலாளர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாண ஆளுநர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மாதாந்த சந்திப்பின்போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

### மூடவேண்டாம்

கைத்தொழில் நிலையம் அல்லது அபிவிருத்தித் திட்டச் சூழலில் நோய்த் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்படும் பட்சத்தில், அந்தத் தொழிற்சாலையை அல்லது திட்டத்தை ஒரேயடியாக மூடிவிடுவதற்குப் பதிலாக சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றி தொடர்ச்சியாகப் பேணுவதற்கான சூழல் குறித்துக் கண்டறிய வேண்டியது அவசியம்.

உரிய சுகாதார பரிந்துரைகளை பின்பற்றி, கைத்தொழில் மற்றும் அத்தியாவசிய சேவைகளை பேணுவதற்கு அரசு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ள நிலையில், பிரதேச மட்டத்தில் குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது குறைபாடுகள் இடம்பெற்றிருப்பது தெரியவந்துள்ளது.

பிரதேச மட்டத்தில் விவசாயிகளின் மரக்கறி மற்றும் பழவகைகளை மேலதிக விலைக்கு கொள்வனவுசெய்து விநியோகிக்கும் பொறிமுறையை சரியாக நடைமுறைப்படுத்தவும். விவசாய பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்காதிருப்பது, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரினதும் பொறுப்பாகும்.

### அபிவிருத்தித் திட்டங்கள்

உள்நாட்டு நிதி மற்றும் வெளிநாட்டுக் கடன் உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த இலக்குகளை உரிய முறையில் பூர்த்தி செய்ய வேண்டும்.

அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஆயிரம் குளங்கள் நிகழ்ச்சித் திட்டம், ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி, ஆயிரம் பாடசாலைகள், வீடமைப்பு, பிரதேச மருத்துவமனைகள், குடி தண்ணீர் மற்றும் மீள் பிறப்பாக்க சக்திவலு போன்ற திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலர்களுடன் நேரடித் தொடர்புகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

### தடுப்பூசி

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு நாட்டுக்குத் தேவையான முழுமையான தடுப்பூசி தொகை தற்போது கிடைத்து வருகின்றது.

விஞ்ஞானபூர்வமாகவும் உரிய திட்டமிடல்களுக்கு அமையவும் குறித்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இதன்போது மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகாத வகையில் சுகாதாரத்துறைக்குத் தேவையான மேலதிக ஒத்துழைப்பை, அரசியல் துறை சார்ந்தவர்களும், ஆளுநர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அதிகாரிகளும் வழங்கவேண்டும்.

### பசளை இலவசம்

விவசாயிகளுக்குத் தேவையான சேதனப் பசளைகளை இலவசமாக வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

சேதனப் பசளையுடனான விவசாயத்தை ஊக்குவிப்பதில் உள்ள சவாலை வெற்றிகொள்வதற்குத் தேவையான உதவியை ஆளுநர்கள் வழங்க வேண்டும்.

சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபடும் சிறு வியாபாரிகளுக்கும் விவசாய சங்கங்களுக்கும் தேவையான உதவிகளை, அரச வங்கிகளின் ஊடாக சலுகை வட்டிக்கு கடன் வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது, என்று ஜனாதிபதி கோத்தாபய இதன்போது தெரிவித்துள்ளார். (ஒ.5,இ)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 07 . 1943

மறைவு 14 . 06 . 2020



அமரர்

**மகேந்திரராணி குமாரராஜன்**

**நெருநல் உளனொருவன் இன்றில்லை....**

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தீர்
கண்ணில் காருண்ய ஒளி வீசினீர்
பண்பில் பர்வதம் போல் உயர்ந்தீர்
விண்ணில் அமராவதி உலகு அடைந்தீரோ

இணுவில். நீங்கா நினைவுகளுடன், திரு.ப.உமையவேள் குடும்பம்

---

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

## விலைக்கேள்விக்கான கோரல் - 2021

1. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவுற்காக, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகக்கான தகைமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றேன்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும், இருப்பினும் வியாபார பதிவினை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்கமுடியும்.
3. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(i) ம் இலக்க 30.09.2016 ம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5), Schedule (பகுதி 3) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 229 0111) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை.முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
6. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக கீழ்வரும் **அட்டவணையின் படி** காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் **03.06.2021 தொடக்கம் 15.06.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை** நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் **16.06.2021 ஆந்** திகதி **10.30** மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் **16.06.2021** ஆம் திகதி **10.30** மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்
8. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் **08.06.2021**ஆம் திகதி **11.00** மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in millions) | Contract Period | Required Grade | Required Bid Security | | Non-refundable fees(Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period | |
| NP/MU/2021/ 06/ PSSP/B3/01 | Modification and improvement of OPD block at DH-Naddankandal (ETU, Dispensary Room, Drug store, Dental Room, Dressing Room, WWC & HLC) | 2.524 | 83 Days | C8 and C7 (Buildings) | 26,000.00 | Till 15.09.2021 | 2,000.00 |
| NP/MU/2021/ 06/PSDG/B3/02 | Repair works of Thaneerutu GHC | 3.529 | 92 Days | C8 and C7 (Buildings) | 36,000.00 | Till 15.09.2021 | 2,000.00 |
| NP/MU/2021/ 06/ PSSP/B3/03 | Construction of separate toilets for Patients and staff at PMCU-Iyankankulam | 1.065 | 71 Days | C9 and C8 (Buildings) | 11,000.00 | Till 01.09.2021 | 2,000.00 |
| NP/MU/2021/ 06/ PSSP/B3/04 | Renovation of existing MO Quarters for DH-Naddankandal | 0.933 | 68 Days | C9 and C8 (Buildings) | 10,000.00 | Till 01.09.2021 | 2,000.00 |
| NP/MU/2021/ 06/ PSSP/B3/05 | Construction of Drivers Rest Room at DH-Oddusuddan | 1.063 | 71 Days | C9 and C8 (Buildings) | 11,000.00 | Till 01.09.2021 | 2,000.00 |
| NP/MU/2021/ 06/PSDG/B3/06 | Improvement of RDHS Doctors Quarters | 0.777 | 63 Days | C9 and C8 (Buildings) | 8,000.00 | Till 01.09.2021 | 2,000.00 |
| NP/MU/2021/ 06/PSDG/B3/07 | Improvement of RDHS Office | 0.610 | 59 Days | C9 and C8 (Buildings) | 7,000.00 | Till 01.09.2021 | 2,000.00 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" dated 18.02.2021 and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.

**வைத்திய கலாநிதி. மு.உமாசங்கர்**
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14ஆம் திகதி....

பயணத் தடை நீடிப்புத் தொடர்பில் இராணுவத் தளபதி மேலும் தெரிவிக்கையில்:

எதிர்வரும் 7ஆம் திகதி பயணத் தடையைத் தளர்த்தத் தீர்மானித்திருந்தோம். எனினும், சில இடங்களில் மக்களின் பொறுப்பற்ற செயல்கள் அதிகரித்துள்ளன. தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறி அநாவசியமாக அவர்கள் நடமாடுகின்றார்கள். நாள்தோறும் கைதுசெய்யப்படுபவர்களின் எண்ணிக்கையிலிருந்து இதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

இதேவேளை, தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்தநிலையில்தான் முழுநேரப் பயணத் தடையை நீடிக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

ஜூன் 7ஆம் திகதி பயணத் தடையைத் தளர்த்த வேண்டாம் என்று விசேட மருத்துவ நிபுணர்களும், சுகாதாரப் பிரிவினரும் பரிந்துரைத்துள்ளனர். ஏற்கனவே இரு வாரங்கள் பயணத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதன் வெளிப்பாட்டை ஜூன் 7ஆம் திகதிக்குப் பின்னர்தான் அறிந்துகொள்ள முடியும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தால் எதிர்வரும் 14ஆம் திகதிக்குப் பின்னரும் பயணத் தடையை நீடிப்பது தொடர்பில் அடுத்த வாரம்தான் முடிவெடுக்க முடியும்.

மக்களின் செயற்பாட்டுகளில்தான் அனைத்து நடவடிக்கைகளும் தங்கியுள்ளன.

பயணத் தடை நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் கொரோனாத் தடுப்பு சுகாதார விதிகளைப் புறக்கணித்து மக்கள் நடந்துகொள்ளும் விதம் குறித்து எம்முடன் நடத்திய கலந்துரையாடலின்போது விசேட மருத்துவ நிபுணர்களும் சுகாதாரப் பிரிவினரும் கவலை தெரிவித்துள்ளனர். - என்றார். நாடு முழுவதும் கடந்த மாதம் 21ஆம் திகதி தொடக்கம் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-ஒ,5,22)

## வடக்கில்...

லைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்றுப் பகல் மேற்கொள்ளப்பட்ட சோதனை ஆகியவற்றின் முடிவுகள் நேற்று இரவு வெளியாகின.

**யாழ்ப்பாண மாவட்டம்**

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 68 பேரும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 20 பேரும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 16 பேரும், அளவெட்டி பிரதேச மருத்துவமனையில் 11 பேரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 3 பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவரும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும் என 123 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

**கிளிநொச்சி**

அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் 2 பேரும், கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 பேரும் என 11 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 31 பேரும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒருவரும், முல்லைத்தீவு விமானப் படைத்தளத்தில் ஒருவரும் என 34 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

**வவுனியா**

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மன்னார்**

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் ஒருவரும், மன்னார் நகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் என 2 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

## கொரோனாவால்....

நேற்று ஒவ்வொருவர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 72 வயதான ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். மூன்று நாள்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் மூவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நபர் ஒருவர் கொவிட் தொற்று நோயால் நேற்று உயிரிழந்தார்.

அவர், சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. மருத்துவமனையின் கொரோனா விடுதியில் அவர் சிகிச்சை பெற்றுவந்தநிலையில், நேற்று உயிரிழந்தார். நந்திமித்திரகம பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே உயிரிழந்தவராவார். இதேவேளை, வவுனியாவில் கொரோனாத் தொற்றால் கடந்த மூன்று நாள்களாக நாளாந்தம் ஒவ்வொருவர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-110)

## இணுவில்....

சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

குறித்த கிராம அலுவலர் பிரிவில், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது குறித்த சிபார்சை, சுகாதாரப் பிரிவினர் யாழ்ப்பாண மாவட்ட கொரோனா ஒழிப்பு செயலணியிடம் முன்வைத்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்கனவே அதிகளவில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட மூன்று கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-20)

## நுங்கு வெட்ட...

வித்தனர்.

இதே பகுதியைச் சேர்ந்த மாரிமுத்து அருமைராசா (வயது 54) என்பவரே உயிரிழந்தார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஆவார்.

அந்த நபர் நுங்கு வெட்டுவதற்கு காட்டுக்கு தனியாகச் சென்றுள்ளார். அதனைத் தொடர்ந்து அவர் பனையில் ஏறி நுங்கு வெட்டுவதற்கு முயற்சித்துள்ளார். இந்தநிலையில், கால் இடறி கீழே வீழ்ந்துள்ளார். இதனை அவதானித்த கடற்றொழிலுக்கு சென்றவர்கள் அம்புலன்ஸை வரவழைத்து, அவரை சங்கானை பிரதேச மருத்துவமனைக்கு அனுப்பினர்.

எனினும், அவர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்படும்போது உயிரிழந்துவிட்டார் என்பது மருத்துவ பரிசோதனையில் தெரியவந்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (து-27)

## 5 மில்லியன்...

யிட்டார். இலங்கைக்கு வரவுள்ள தடுப்பூசிகள் தொடர்பான விவரத்தையும் இதன்போது அவர் வெளியிட்டார். அவர் கூறியவை வருமாறு,

'சீனாவிடமிருந்து ஜூன் 6 ஆம் திகதி 10 லட்சம் தடுப்பூசிகளும், அதன்பின்னர் ஜூன் 9 ஆம் திகதி மேலும் 10 லட்சம் தடுப்பூசிகளும் கிடைக்கப்பெற வுள்ளன.

14 மில்லியன் ஸ்புட்னிக் வை தடுப்பூசிகளை கொள்வனவுசெய்வதற்கு ரஷ்ய நிறுவனத்துடனும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக எவ்வளவு தொகை கிடைக்கும் என்பது ஓரிரு நாள்களுக்குள் அறிவிக்கப்படும்.

அமெரிக்காவின் பைசர் நிறுவனத்துடனும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளோம். இதன்படி இவ் வருடத்துக்குள் இலங்கைக்கு 5 மில்லியன் தடுப்பூசிகள் வழங்கப்படும் என அந் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. முதற்கட்டமாக ஜூலை மாதத்தில் 3 அல்லது 4 லட்சம் தடுப்பூசிகள் வரவுள்ளன.

அத்துடன், 'சைனோஃவெக்' மற்றும் 'ஜொன்ஸ்டன் அன்ட் ஜொன்ஸ்டன்' தடுப்பூசிகளைப் பெறுவதற்கான பேச்சுகளும் இடம்பெற்று வருகின்றன.' என்றார். - (து-44)

## தீப்பற்றிய...

அபாயம் நிலவுகின்றது என்று சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

கப்பலை ஆழ்கடலுக்கு கொண்டுசெல்லும் செயற்பாடு நேற்று முற்பகல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கப்பலின் பிற்பகுதி நேற்றுமாலை தரை தட்டியமையால் ஆழ்கடலுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கப்பல் நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய வலயத்துக்குப் பொறுப்பான பணிப்பாளர் அன்ரு லிஹீ தெரிவித்தார்.

எனினும், கப்பலின் முன்பகுதி தொடர்ந்தும் மிதந்து கொண்டிருப்பதாகவும், கொள்கலன்களை ஏற்றிய பகுதியில் தொடர்ந்தும் புகை வெளியேறுவதாகவும் அன்ரு லிஹீ கூறினார்.

இலங்கை கடற்படை அணியொன்று இன்று முற்பகல் கப்பலை ஆழ்கடலுக்கு இழுத்துச்செல்ல முயற்சித்த போதிலும் பின்னர் அதனை கைவிட வேண்டி ஏற்பட்டது.

தீப்பற்றிய கப்பலில் 278 மெட்ரிக் தொன் எரிபொருள் காணப்படுகின்றது என்று சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் சட்டத்தரணி தர்ஷனி லஹதபுர தெரிவித்தார்.

சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபைக்கு சொந்தமான சமாரக்சா கப்பல், தீப்பற்றும் கப்பலுக்கு அருகில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கப்பலில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டால் அதனை கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எண்ணெய்க் கசிவு ஏற்பட்டால், அதனை முகாமைத்துவம் செய்யும் இயலுமை இந்தக் கப்பலில் காணப்படுகின்றது. (து-இ)

## 10 வயதுக்கு....

தார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒரு வயது மற்றும் ஒன்றரை வயது குழந்தைகள் உள்பட 7 பேருக்கும், கரவெட்டி மற்றும் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா 3 பேருக்கும், கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 வயது குழந்தைக்கும், முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூன்றரை வயது குழந்தை உள்பட 8 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

## தடுப்பூசி....

மூன்று நாள்களில் அவை நிறைவடைந்துள்ளன. இவ்வாறு இராணுவத் தளபதியும் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இராணுவத்தினர் உள்ளிட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியினர் மற்றும் சுகாதாரப் பிரிவினர் ஆகியோருக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி முதல் கட்ட கொரோனாத் தடுப்பூசிகளை யாழ்.மாவட்ட மக்கள் பெற்றுள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் ஊடாகத்தான் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அந்தக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சாராதவர்களும் தடுப்பூசி ஏற்றிக்கொண்டுள்ளனர். இதனால் ஒதுக்கப்பட்ட தடுப்பூசிகள் விரைவாக முடிவடைந்துள்ளன.

இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் விரைவில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்படும். அதேவேளை, வடக்கிலுள்ள ஏனைய மாவட்டங்களிலும் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்படும்- என்றார். (ஒ,5,22)

## 50,000....

அடுத்தகட்ட தடுப்பூசிகள் வார இறுதியில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த பகுதி மக்களுக்கு அடுத்த கட்டத் தடுப்பூசிகள் வந்தவுடன் குறித்த நிகழ்ச்சி நிரலின்படி வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். எனவே, இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 50 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்ற நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து இன்றுவரை வழங்கப்பட்டு நிறைவடைந்துவிட்டன.

நேற்றுமுன்தினம் மாலையுடன் 32 ஆயிரம் தடுப்பூசிகள் நிறைவடைந்த நிலையில், மிகுதித் தடுப்பூசிகள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளன.

எனினும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பணியாளர்கள் மற்றும் 15 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி வழங்கப்படும் என எதிர்பார்த்து இருந்த போதிலும் கூடுதலான மக்கள் ஆர்வம் காட்டி தடுப்பூசியைப் பெற்றதன் காரணமாக நேற்று மதியத்துடன் குறித்த தடுப்பூசிகள் அனைத்தும் மாவட்டத்தில் நிறைவடைந்துவிட்டன என்றும் மாவட்டச் செயலர் தெரிவித்தார். (து-26,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபாலகங்கள் இன்று திறப்பு



**கொழும்பு, ஜூன் 3**

**கொடுப்பனவுகளைப் பெறுதல் மற்றும் மருந்துகளை விநியோகித்தல் ஆகியவை உள்ளிட்ட மட்டுப்படுத்தப்பட்ட கடமைகளுக்காக இன்று தொடக்கம் நாடளாவிய ரீதியில் உள்ள தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்களைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளச்செல்லும் பயனாளிகள், கொடுப்பனவுக்கான அட்டை அல்லது முதியோர் அடையாள அட்டை என்பவற்றை பாதுகாப்புப் பிரிவினரிடம் காண்பித்து, தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்களுக்குச் செல்ல முடியும் என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் சுகாதார அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலணியின் கோரிக்கைக்கு அமைவாக வீடுகளில் உள்ள நோயாளர்களுக்கான மருந்துகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் தபால் திணைக்களத்தால் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைகள் தொடர்பில் 1950 என்ற துரித இலக்கத்துக்கு அழைத்து, மக்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# இரசாயனக் கப்பலால் நீரளவில் மாற்றமில்லை

### நாரா நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்த, இரசாயனப் பதார்த்தங்கள் கடலில் கலந்துள்ளபோதிலும், நீரின் அளவில் மாற்றமேதும் இல்லை என்று நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பாலித்த கித்சிறி தெரிவிக்கையில்,

நாரா நிறுவனத்துக்கு உரித்தான சமுத்ரிகா கப்பல், பேர்ள் கப்பலுக்கு அருகில் பயணித்தது. அதன்[illegible] கப்பல் நங்கூரமிடப்பட்டுள்ள பகுதியின் அடியிலுள்ள மணல், நீர் உள்ளிட்டவற்றின் மாதிரிகள் பெறப்பட்டன. இரண்டு குழுக்கள் இணைந்து ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. கப்பலில் காணப்பட்டன எனக் கூறப்படும் இரசாயனப் பதார்த்தங்கள், உரம் போன்றவற்றால் கடல் நீருக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் கப்பல் நங்கூரமிடப்பட்டுள்ள இடத்திலுள்ள நீரின் அளவில் எவ்வித மாற்றமும் தென்படவில்லை. நிறுவனத்தின் ஆரம்ப கட்ட பரிசோதனைகளில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் எடுக்கப்பட்ட மாதிரிகள் எதிர்வரும் இரண்டு நாள்களுக்குள் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம-4)

# நினைவேந்தல் பயங்கரவாத செயற்பாட்டை மீள் உருவாக்கும் என்பது முட்டாள் தனம்

### முன்னாள் போராளியின் கைது தொடர்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சி கண்டனம்

மட்டக்களப்பு, ஜூன் 3

படுகொலைசெய்யப்பட்ட மக்களை நினைவுகூருவதும், தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை பதிவேற்றம் செய்வதும் பயங்கரவாதச் செயற்பாட்டை மீள உருவாக்கும் என்பது சாத்தியமில்லாததும், முட்டாள்தனமானதுமான ஒரு கருதுகோள். எனவே இவ்வாறு சாத்தியமில்லாத விடயங்களை முன்நிறுத்தி எமது முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுவது மிகவும் கண்டிக்கத்தக்கது என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.இளங்கதிர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளரான நாகராசா பிரதீபராசா பயங்கரவாதத்தை மீளுருவாக்கும் விதமான பதிவுகளை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றினார் என்ற அடிப்படையில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

ஜனநாயகப் போராளிகள் கட்சியானது ஜனநாயக ரீதியில் அரசியல் நீரோட்டத்தில் பயணிக்கும் ஒரு கட்சியாகும். அந்தவகையில் நாங்கள் எமது மக்களை ஒரு ஜனநாயக வழிக்குக் கொண்டு வந்து அதற்கூடாக தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வருவதற்காகவே முயற்சித்துக் கொண்டு வருகின்றோம். இதுவே எங்கள் நோக்கமுமாகும்.

இவ்வாறு எமது நோக்கமும், செயற்பாடுகளும் இருக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மௌனத்தின் பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டு ஜனநாயக வழியில் இயங்கும் போராளிகளைக்கொண்டு உருவாக்கப்பட்ட எமது ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் தீபனை இலங்கை யின் புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளனர். இந்த கைது விடயத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஏனெனில் ஜனநாயக வழியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் முன்னாள் போராளிகள்மீது தேவையற்ற வகையில் கைதுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நாட்டில் இனப்படுகொலை நடைபெற்றுள்ளது. அவற்றை எமது தமிழ் மக்களும், போராளிகளும் நினைவுகூருவது வழமையானதொரு விடயம். அது பயங்கரவாதத்தை வளர்க்கும் செயற்பாடு அல்ல.

தமிழ் மக்கள் மீதும், தமிழ் மக்களுக்குப் பாதுகாவலர்களாக இருக்கின்ற முன்னாள் போராளிகளின் அமைப்பான ஜனநாயகப் போராளிகள் கட்சி மீதும் தேவையற்ற கைது நடவடிக்கைகளை மேற்கொள்வது எதிர்காலத்தில் அரசுக்கு மிகப் பெரும் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களைத் தான் உருவாக்கும் -என்றுள்ளது. (ப-150)

# மாணவர் எண்ணிக்கை தொடர்பில் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 3

2022ஆம் ஆண்டில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் மீண்டும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

வகுப்பொன்றில் அனுமதிக்கப்படும் அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கை 35ஆக இருக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தும் வகையில், 40 மாணவர்களை இணைத்துக்கொள்ள கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது என்று சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

எனினும், தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டே இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய சட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டு, அனுமதி பெறப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கடந்த வாரம் கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# ஆனந்த தேரருக்கு உயிர் அச்சுறுத்தலாம்

கொழும்பு, ஜூன் 3

தனக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்று கொழும்பு நாரஹேன்பிட்டி அபயராமய விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

எனக்கு எந்த அச்சுறுத்தல் விடுத்தாலும், நான் அசையப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசை ஆட்சிக்குக் கொண்டுவருவதில் பெரும் பங்காற்றியவர் முருந்தெட்டுவே ஆனந்த தேரர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)




# பயணத்தடை நீக்கப்பட்டதும் 2,068 பேர் இலங்கை வருகை

கொழும்பு, ஜூன் 3

இலங்கையில் விமான நிலையங்களுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை கடந்த முதலாம் திகதி தளர்த்தப்பட்ட பின்னர், 2 ஆயிரத்து 68 பயணிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக நாட்டை வந்தடைந்துள்ளனர் என்று விமான நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். குறித்த பயணிகள் 29 விமானங்களில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். சவூதி அரேபியா, கட்டார் மற்றும் டுபாய் ஆகிய நாடுகளிலிருந்து இவர்கள் வருகை தந்துள்ளனர். இவர்களில் 69 பேர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள். அதேவேளை இந்த காலகட்டத்தில் 963 பயணிகள் 11 விமானங்கள் மூலம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.